Ceiling
Pedestal
Table
Orbital
Wall
Exhaust
KDK SINCE 1909 JAPAN
ELITERADIO Since 1959
facebook.com/kdksrilanka | shop.eliteradio.com

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
மலர் : 04, இதழ்: 59 சோபகிருது வருடம், ஆவணி மாதம் 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
(12.09.2023) ஹிஜ்ரி 1445, ஸபர் - 26, 0115 886187 - பக்கங்கள் 10
விலை ரூ.50

Special offer
1st to 30th September 2023
KDK SINCE 1909 JAPAN
DISCOUNT 15% (On selected models only)
Cash or Card
Ceiling | Pedestal | Table | Orbital | Wall | Exhaust
ELITERADIO Since 1959
Inquiries (011) 250 0823 | (011) 236 8472 / 73 / 74

## உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்

# உரிய விசாரணை நடத்த வேண்டும்!

## ஐ.நா. மனித உரிமைகள் பேரவை இலங்கையிடம் வலியுறுத்தல்




உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் சுயாதீனமான மற்றும் வெளிப்படையான விசாரணையை சர்வதேச உதவியுடனும் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது பிரதிநிதிகளின் முழுமையான பங்களிப்புடனும் மேற்கொள்ள வேண்டும் என ஐ.நா. மனித உரிமைகள் பிரதி உயர்ஸ்தானிகர் நேற்று திங்கட்கிழமை (11) தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகளுக்கான...

02பக்கம்

## சைபர் தாக்குதலில் அழிந்த தரவுகள்

கே. சுபானி

அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான gov.lk என்ற மின்னஞ்சல் முகவரியை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட இணைய (சைபர்) தாக்குதலால்...

02 பக்கம்

## உஷ்



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய இம்மாதம் வெளிநாட்டுக்கு விஜயமொன்றை மேற்கொள்ளவிருந்தார்.

ஆனால் இப்போது ஈஸ்ரர் தின தாக்குதல் தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சையால் அந்தப் பயணத்தை ஒத்திவைத்துள்ளாராம் கோட்டா.

## மூன்று ஆண்டுகளில் 9,700 பேர் தற்கொலை

கடந்த மூன்று ஆண்டுகளில் நாட்டில் சுமார் 9ஆயிரத்து 700 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பேராசிரியர் வசந்த அத்துக்கோரள தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சின் புள்ளி விபரவியல் தகவல்களின் அடிப்படையில் இந்த விடயத்தை அவர் வெளியிட்டுள்ளார்.

கடந்த 2022ஆம் ஆண்டில் மட்டும் 3ஆயிரத்து 406 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாகவும் இதில் 2ஆயிரத்து 832 பேர் ஆண்கள் எனவும் தெரியவந்துள்ளது.

பொருளாதார நெருக்கடி நிலைமைகள் காரணமாக கடந்த ஆண்டில் 192 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். மொத்த தற்கொலைச் சம்பவங்களில் ஐந்து வீதமான தற்கொலைகள், பொருளாதார நெருக்கடி காரணமாக இடம்பெற்றுள்ளதாக பேராசிரியர் வசந்த அத்துக்கோரள மேலும் தெரிவித்துள்ளார்.

## பொறுப்புக்கூறல் முக்கியமானது

### இலங்கையை மீண்டும் வலியுறுத்திய ஐ.நா.



இலங்கையின் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் பாதுகாப்பதில் பொறுப்புக்கூறல் முக்கியமானது என ஐக்கிய நாடுகளின்...

02 பக்கம்

## ஹோட்டலில் மனைவியை கொன்றுவிட்டு பொலிஸ் நிலையம் சென்ற இலங்கையர்

### சிங்கப்பூரில் சம்பவம்



02பக்கம்

## பொறுப்புக்கூறல் நிராகரிப்பு

### மனித உரிமை பேரவையின் திட்டத்தை மீண்டும் கடாசியது இலங்கை




ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் பொறுப்புக்கூறல் தொடர்பான திட்டத்தை

இலங்கை அரசாங்கம் முற்றாக நிராகரிப்பதாக ஜெனீவாவிலுள்ள ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ஹிமாலி சுபாசினி அருணதிலக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 54ஆவது அமர்வின் ஆரம்பத்தில் நேற்றுமுன்தினம் இலங்கையின் நிலைப்பாட்டை முன்னிறுத்தி உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் பொறுப்புக்கூறல்...

02 பக்கம்

## ஞானசார தேரருக்கு நீதிமன்றம் அபராதம்



2014இல் கொழும்பு நிப்பொன் ஹோட்டலுக்குள் அத்துமீறி பிரவேசித்து ஜாதிக பல சேனா வட்டரெக்க விஜித தேரர் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் மாநாட்டுக்கு இடையூறு விளைவித்தமை தொடர்பில் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் கலபொட அத்தே ஞானசார தேரர் உள்ளிட்ட 07 பேர் குற்றத்தை நேற்று(11) ஒப்புக்கொண்டனர்.

02 பக்கம்

## கிழக்கு கடற்பரப்பை அண்டி பூமியதிர்வு

கே. சுபானி

கிழக்கு கடற்பரப்பில் நேற்று (11) அதிகாலை 1.30 மணியளவில் 4.65 ரிச்டர் அளவில் மிதமான நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

எனினும், இந்நிலநடுக்கத்தால் சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை என புவியியல் மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து பணியகம் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மட்டக்களப்பு கடற்பகுதியில் நேற்று அதிகாலை 4.65 ரிச்டர் அளவில் மிதமான நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

02 பக்கம்

## அரசியல் விமானத்தில் ஏறினார் திலித்






மௌபிம ஜனதா கட்சியின் தலைவராக நியமிக்கப்பட்டு, இலங்கையின் முன்னணி

தொழிலதிபரான திலித் ஜயவீர அரசியலில் பிரவேசித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் புதிதாகப் புதுப்பிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிப் பட்டியலின்படி, விமானம் சின்னத்தில் தேர்தலில் போட்டியிடும் மௌபிம ஜனதா கட்சியின் தலைவராக திலித் ஜயவீர பெயரிடப்பட்டுள்ளார்.

தெரண ஊடக வலையமைப்பு, ஜோர்ஜ் ஸ்ட்ரூவட்ஸ், சிட்ரஸ் ஹோட்டல், லிபர்ட்டி பப்ளிசர்ஸ் உட்பட பல வர்த்தக நிறுவனங்களின் தலைவராக திலித் ஜயவீர செயற்படுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கமெண்ட் கந்தர்...



இப்படியெல்லாம் ஐ.நா. சொல்லுமென்று தெரிஞ்சுதான் ரணில் ஐயா நேற்றே விசாரணை ஆணைக்குழு அறிவிச்சார்...

## இலங்கை உட்பட்ட நாடுகளின் கடன் நெருக்கடிக்கான தீர்வு

### முயற்சிகளை இரட்டிப்பாக்க ஜி20 தலைவர்கள் இணக்கம்

இலங்கை, கானா போன்ற நாடுகளின் கடன் நெருக்கடிக்குத் தீர்வை காண்பதற்கான முயற்சிகளை இரட்டிப்பாக்குவதற்கு ஜி20 நாடுகளின் தலைவர்கள் இணங்கியுள்ளனர்.

வெள்ளை மாளிகை, அறிக்கையொன்றில் இதனை தெரிவித்துள்ளது.

ஜி20 நாடுகள் அர்த்தபூர்வமான கடன் நிவாரணத்தை வழங்கவேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார் என அதில் மேலும் தெரிவித்துள்ளது.

இதன்மூலம் கடந்த வருடங்களில் தொடர்ச்சியாக எதிர்கொண்ட....

02 பக்கம்

## பிள்ளையான் உள்ளிட்டோருக்கு பாதுகாப்பு அமைச்சால் நிதி

### விசாரிக்க அநுரகுமார கோரிக்கை



பிள்ளையான் உள்ளிட்ட பலருக்கு பாதுகாப்பு அமைச்சினால் 35 இலட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திசாநாயக்க குற்றச்சாட்டு ஒன்றை முன்வைத்துள்ளார்.

பதுளையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஏப்ரல் 21 தாக்குதல் குறித்து...

02 பக்கம்

# கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியில் எலும்புக்கூடுகளை இனங்காண்பதில் சவால்

விஜயரத்தினம் சரவணன்

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியில் மனித எலும்புக்கூடுகள் ஒன்றோடு ஒன்று நெருக்கமாகவும் ஒன்றின்மீது ஒன்று பல அடுக்காகவும் காணப்படுவதால் எத்தனை எலும்புக்கூடுகள் காணப்படுகின்றன என்பதை இனங்காண்பதில் சவால்கள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வுப்பணிகள் ஐந்தாவது நாளாக (11)நேற்று இடம்பெற்ற நிலையில், அகழ்வுப் பணிகளின் நிறைவில் முல்லைத்தீவு சட்டவைத்திய அதிகாரி ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே, இத் தகவலை வெளியிட்டுள்ளார்.

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வாய்வு நடவடிக்கைகள் செப்டெம்பர் (06) புதனன்று உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிலையில் ஐந்தாம்நாள் அகழ்வாய்வுகள் செப்டெம்பர் (11) நேற்று முல்லைத்தீவு நீதிமன்ற













நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் இடம்பெற்றது.

அதேவேளை குறித்த அகழ்வாய்வு முல்லைத்தீவு சட்டவைத்திய அதிகாரி கே.வாசுதேவா, சட்டத்தரணி கே.எஸ்.நிரஞ்சன், தடயவியல் பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் ஆகியோரின் பங்கேற்புடன், தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரால் முன்னெடுக்கப்பட்டது.

ஐந்தாம்நாள் அகழ்வாய்வுகள் தொடர்பில் சட்டவைத்திய அதிகாரி கே.வாசுதேவா கருத்துத் தெரிவிக்கையில்,

ஐந்தாம்நாள் அகழ்வாய்வுகளில் இரண்டுமனித எலும்புக்கூடுகள் முழுமையாகவும் ஒரு மனித எலும்புக்கூடு பகுதியளவிலும் அகழ்ந்தெடுக்கப்பட்டதுடன், ஒரு துப்பாக்கி ரவையும் தடயப் பொருளாக எடுக்கப்பட்டுள்ளது.

ஒன்றின் மீது ஒன்று மிக நெருக்கமாகவும்,பல அடுக்குகளாகவும் மனித எலும்புக்கூடுகள் காணப்படுகின்றன. எனவே எத்தனை மனித எலும்புக்கூடுகள் உள்ளன என்பதை தற்போது இனங்காணமுடியாதுள்ளது.

படிப்படியாக அகழ்வுகளை மேற்கொண்டு, மனித எச்சங்களின் மேலுள்ள மண்ணை அகற்றும்போதுதான் எத்தனை மனித எலும்புக்கூடுகள் உள்ளன என்பதை இனங்காண முடியும்.

இன்னும் ஓரிரு தினங்களில் எத்தனை எலும்புக்கூடுகள் இனங்காணப்பட்டுள்ள என்பதை தெரிவிக்கமுடியும்.

அதேவேளை கடந்த செப்டெம்பர்(08) வெள்ளியன்று இரண்டு மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டிருந்த நிலையில், தற்போது மொத்தம் 04மனித எலும்புக்கூடுகள் முழுமையாகவும் ஒரு மனித எலும்புக்கூடு பகுதியளவிலும் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இதுவரை 14மீற்றர் நீளத்திலும் 3மீற்றர் அகலத்திலும் 1.5மீற்றர் தொடக்கம் 2மீற்றர் வரையான ஆழத்திலும் அகழ்வாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்தோடு கடந்த செப்டெம்பர் (09) சனிக்கிழமையன்று விடுதலைப்புலிகள் அமைப்பின் தகடு ஒன்று எடுக்கப்பட்டது. அதுதொடர்பில் பின்னர் அறியத்தரப்படும் என்றார்.

மேலும் குறித்த ஐந்தாம் நாள் அகழ்வுப்பணிகள் இடம்பெறும் இடத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் வருகைதந்திருந்ததுடன் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், அனந்தி சசிதரன் முன்னாள் உள்ளூராட்சிமன்றத் தலைவர்கள், உறுப்பினர்கள், சமூகசெயற்பாட்டாளர்கள், கிராமமட்ட பிரதிநிதிகள் எனப் பலரும் பிரசன்னமாகியிருந்தனர்.

# நிலுவையில் உள்ள வழக்கை வேறு நீதவானுக்கு மாற்றுக!

## சஷி வீரவன்சவின் வழக்கில் மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு



பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவின் மனைவி சஷி வீரவன்சவுக்கு எதிராக கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கை வேறு நீதவானுக்கு மாற்றுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

சஷி வீரவன்ச சமர்ப்பித்த விண்ணப்பத்தை பரிசீலித்த மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இதன்படி, நாளை(இன்று) (12) கொழும்பு பிரதான நீதவான் முன்னிலையில் தொடர்புடைய வழக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டதன் பின்னர், அந்த நீதிமன்றத்தில் தற்போதுள்ள வழக்கை இலக்கம் இரண்டு நீதவான் நீதிமன்றத்துக்கு மாற்றவும் உத்தரவிடப்பட்டது.

குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்தை மீறியமைக்காக தமது கட்சிக்காரருக்கு எதிராக கொழும்பு பிரதான நீதவான் முன்னிலையில் வழக்கு விசாரணை இடம்பெறுகிறது எனவும் அந்த வழக்கில் அவருக்கு நீதி கிடைக்காது எனவும் மனுதாரர் சஷி வீரவன்ச சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி நளின் லத்துவஹெட்டி நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

நோய்வாய்ப்பட்டிருந்த போதும் இந்த வழக்கை விசாரிப்பதற்கு நீதவான் தயாராக இருப்பதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி சட்டத்தரணி, நீதி கிடைக்காது என்ற சந்தேகம் உள்ளதால், வழக்கை வேறு நீதிமன்றத்துக்கு மாற்றுமாறு தமது கட்சிக்காரர் நீதிமன்றத்திடம் கோருவதாகவும் தெரிவித்தார்.

இக்கோரிக்கை தொடர்பில் நீதிமன்றில் முன்னிலையாகிய பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலிப பீரிஸ், வழக்கு விசாரணைகளை வினைத்திறனுடன் நடத்துவதற்கு நீதவான்களால் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டார்.

ஏதேனும் பிரச்சினையான சூழ்நிலை ஏற்படுமாயின் அவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் உரிய உத்தரவுகளை பிறப்பிக்குமாறும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் கேட்டுக்கொண்டார்.

முன்வைக்கப்பட்ட உண்மைகளை பரிசீலித்த பின்னர், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதியரசரால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

# ஹொரணை விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

ஹொரணை, கெபெல்லகொட பிரதேசத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்று விபத்துக்குள்ளானதில் 41 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

விபத்தின் போது காயமடைந்த நபர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், அவர் உயிரிழந்துள்ளதாக ஹொரணை பொலிஸார் தெரிவித்தனர் .

குறித்த விபத்தில் ஹொரணை,கெபெல்லகொட பிரதேசத்தில் உள்ள தனியார் நிறுவனமொன்றில் பணிபுரிந்து வந்த மாத்தளை. மனன்வத்தை,தல்வத்த பகுதியைச் சேர்ந்த அசங்க புஷ்பகுமார செனவிரத்ன என்பவரே உயிரிழந்துள்ளார்.சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பொறுப்புக்கூறல் முக்கியமானது...

மனித உரிமைகள் பிரதி உயர்ஸ்தானிகர் நடா அல்-நஷிப் நேற்று திங்கட்கிழமை (11) தெரிவித்தார்.

"கடந்த கால மீறல்களை அங்கீகரிப்பதும் நம்பகமான பொறுப்புக்கூறல் நடவடிக்கைகளை மேற்கொள்வதும் இலங்கை அதிகாரிகளின் கடமையாக இருந்தாலும், பொறுப்புக்கூறலை முன்னெடுப்பதில் இந்த சபையும் உறுப்பு நாடுகளும் ஒரு முக்கியமான மற்றும் நிரப்பு பங்கை வகிக்க முடியும்" என்று ஜெனிவாவில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 54ஆவது அமர்வின் போது அவர் கூறினார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதில் தாமதம் மற்றும் 13 ஆவது திருத்தத்தின் கீழ் மாகாண சபைகளை மறுசீரமைப்பதில் ஏற்பட்டுள்ள தாமதங்கள், அரசியல் பங்கேற்புக்கான மக்களின் உரிமையையும் வாக்காளர்களின் சுதந்திரமான கருத்துக்களையும் மட்டுப்படுத்தியுள்ளதாக அவர் கூறினார்.

பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கையின் கீழ் அரசாங்கத்தின் பொருளாதார மீட்சிக் கொள்கைகள் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களை பாதுகாப்பதற்கான அதன் கடமைகளால் வழிநடத்தப்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சர்வதேச நிதி நிறுவனங்கள் உட்பட சர்வதேச சமூகம், சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் உதவி தொடர்பான கடப்பாடுகளுக்கு இணங்க, இலங்கையை மீட்பதில் தொடர்ந்து ஆதரவளிக்க வேண்டும்.

எதிர்ப்புத் தெரிவிக்கும் உரிமையை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள், மக்கள் தங்கள் குறைகளை வெளிப்படுத்துவதையும் விமர்சன விவாதத்தில் ஈடுபடுவதையும் தடுப்பது நாட்டில் மேலும் பதற்றத்தையே உருவாக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

உண்மையைக் கண்டறிவது மட்டும் போதுமானதாக இருக்காது. மற்றும் ஒரு சுயாதீனமான தற்காலிக சிறப்பு நீதிமன்றம் உட்பட பொறுப்புக்கூறலுக்கான தெளிவான அர்ப்பணிப்புடன் இலங்கை இருக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் தொடர்பாக சர்வதேச உதவியுடன், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது பிரதிநிதிகளின் முழுப் பங்கேற்புடன், பின்தொடர்ந்து, சுதந்திரமான மற்றும் வெளிப்படையான விசாரணையை நிறுவுமாறு ஐ.நா மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் இலங்கை அரசாங்கத்துக்கு பலமுறை பரிந்துரைத்துள்ளதாக அவர் கூறினார்.

"வரவிருக்கும் சில சட்டங்கள், குறிப்பாக பயங்கரவாத தடுப்புச் சட்டம் (PTA) மற்றும் ஊடக ஒளிபரப்பை ஒழுங்குபடுத்தும் புதிய சட்டத்தை மாற்றியமைக்கும் முன்மொழியப்பட்ட பயங்கரவாத எதிர்ப்பு மசோதா பற்றிய கவலைகளை இந்த அறிக்கை வழங்குகிறது. இதற்கிடையில் பயங்கரவாத தடுப்புச் சட்ட மற்றும் நீண்டகால பயங்கரவாத தடுப்புச் சட்ட வழக்குகளின் மதிப்பாய்வு விரைவுபடுத்தப்பட வேண்டும்" என்றும் அவர் மேலும் கூறினார்.

## இலங்கை உட்பட்ட...

பொருளாதார அதிர்ச்சியிலிருந்து மீள முயலும். குறைந்த மற்றும் நடுத்தர வருமான நாடுகள் மீண்டும் தங்களை உறுதிப்படுத்திக்கொள்ள மிக முக்கியமான தேவைகளுள் முதலீடு செய்ய முடியும் எனவும் பைடன் தெரிவித்துள்ளார் என வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது. இலங்கை, கானா போன்ற நாடுகளின் தொடரும் கடன் நெருக்கடிக்கு தீர்வை காண்பதற்கான தங்களின் முயற்சிகளை இரட்டிப்பாக்குவதற்கு புதுடில்லியில் தலைவர்கள் தங்கள் அர்ப்பணிப்பை வெளியிட்டனர். உலக வங்கி சர்வதேச நாணய நிதியத்தின் கூட்டங்களில் அர்த்தபூர்வமான முன்னேற்றத்தை எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி பைடன் தெரிவித்தார் எனவும் வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

## ஈஸ்டர்...

ஐக்கிய நாடுகளின் பிரதி உயர்ஸ்தானிகர் நாடா அழ நஷீவ் ஜெனீவாவில் உள்ள இலங்கை மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் அலுவலகத்தின் அறிக்கையை பேரவையில் நேற்று சமர்ப்பித்தார்..

இலங்கை அரசாங்கம் மனித புதைகுழி வழக்கு விசாரணைகள் மற்றும் வழக்குகளை விரைவுபடுத்த வேண்டும் என்று அப்போது அவர் கூறினார். ஈஸ்டர் ஞாயிறு தின குண்டுவெடிப்பு உட்பட உரிமை மீறல்கள், சர்வதேச மனித உரிமைகள் தரங்களுக்கு இணங்க எனவும் அவர் வலியுறுத்தினார்.

"உண்மையைத் தேடுவது மட்டும் போதாது, பொறுப்புக்கூறலுக்கான தெளிவான அர்ப்பணிப்புடன் இலங்கை இருக்க வேண்டும்," என்றும் அவர் கூறினார்.

## ஞானசார..

முறைப்பாடு செய்த தரப்பினருக்கு ஞானசார தேரர் உள்ளிட்டோர் 3 இலட்ச ரூபா நட்டஈடு வழங்குமாறு உத்தரவிடப்பட்டதுடன், மீண்டும் இவ்வாறான குற்றங்களைச் செய்யக் கூடாது என கோட்டை நீதவான் திலின கமகே அவர்களை கடுமையாக எச்சரித்தார்.

இதற்கிடையில், குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட ஒரு குற்றச்சாட்டை இணக்கமாக முடிக்க இரு தரப்பும் சம்மதம் தெரிவித்தன.

## கிழக்கு...

இந்நிலநடுக்கம் மட்டக்களப்பு கடற்பகுதியிலிருந்து சுமார் 310 கிலோமீற்றர் தொலைவிலுள்ள ஆழ்கடல் பகுதியில் ஏற்பட்டுள்ள நிலையில் சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் நாட்டின் சில பகுதிகளில் இவ்வாறான சிறு அளவிலான நிலநடுக்கங்கள் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சைபர் தாக்குதலில்...

சுமார் 5 ஆயிரத்துக்கும் அதிகமான தரவுகள் அழிந்துள்ளதாக இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம் தெரிவித்துள்ளது.

அமைச்சரவை அலுவலகம் உட்பட gov.lk என்ற மின்னஞ்சல் முகவரியை உபயோகிக்கும் பல அரச நிறுவனங்களின் மின்னஞ்சல்கள் இணைய தாக்குதலுக்குள்ளாகியுள்ளன.

கடந்த மே மாதம் 17ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 26ஆம் திகதிவரையான காலப்பகுதிக்குள் இந்த இணைய தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி இணைய தாக்குதலால் அழிக்கப்பட்டுள்ள தரவுகளை மீளப் பெறுவது கடினம் என இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலைய அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் இணைய தாக்குதலின் பாதிப்பை குறைப்பது குறித்தான பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக ICTA நிறுவனம் தெரிவித்துள்ளது.

## பொறுப்புக்கூறல்...

தொடர்பான திட்டத்தை சந்தேகத்துக்குரிய ஆணை என வர்ணித்துள்ள அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, இலங்கை அரசாங்கம் பொறுப்புக்கூறல் திட்டத்துக்கு வழிவகுத்த இரண்டு 46/ 1 -51/ 1 தீர்மானங்களையும் முற்றுமுழுதாக நிராகரித்துள்ளது என்பதை நான் ஆரம்பத்திலேயே தெரிவிக்க விரும்புகின்றேன்.எழுத்துமூல அறிக்கைகளையும் முடிவுகளையும் பரிந்துரைகளையும் நாங்கள் நிராகரிக்கின்றோம்.

இந்த தீர்மானங்களில் காணப்படும் உள்ளடக்கங்களை ஏற்றுக்கொள்ளாததால் பல நாடுகள் இந்த தீர்மானத்தை எதிர்த்தன அல்லது அதில்வாக்களிப்பதைதவிர்த்தன என்பதை நாங்கள் மீண்டும் நினைவுபடுத்த விரும்புகின்றோம்.குறிப்பாக ஆதாரங்களை சேகரிக்கும் பொறிமுறையை அவர்கள் ஏற்றுக்கொள்ளவேயில்லை.ஆதாரங்களை சேகரிக்கும் பொறிமுறை உருவாக்கப் பட்டுள்ளமை முன்னொருபோதும் இடம்பெறாத விடயம்.

இது மனித உரிமைப் பேரவையின் உறுப்பு நாடுகள் பேரவைக்கு வழங்கிய ஆணைக்கு அப்பால் செல்கின்றது என்பதை இலங்கை மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றது.இந்த தீர்மானங்கள் உள்விவகாரங்களில் தலையிடுபவை சமூகங்களை துருவமயப்படுத்துபவை.

மேலும் இந்த தீர்மானங்களை மனித உரிமைகளுக்கு அப்பாற்பட்ட காரணங்களுக்காகவும் தங்களின் உள்நாட்டு அரசியலுக்காகவும் ஒருசில நாடுகள் பின்பற்றுகின்றன. இந்த தீர்மானத்தின் நிதிசார்ந்த தாக்கங்கள் குறித்து பல நாடுகள் கேள்வி எழுப்பியுள்ளன. இது பேரவையினதும் அங்கத்துவ நாடுகளினதும் வளங்கள் மீது பயனற்ற விதத்தில் செலவுகளை உருவாக்கக்கூடியது என்பதை இலங்கை மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டிவந்துள்ளது.

இதன் காரணமாக இலங்கை இதற்கு ஒத்துழைப்பு வழங்காது.எனினும் பல்தரப்பு கட்டமைப்பில் ஆக்கபூர்வமாக பங்கெடுக்கின்ற நாடு என்ற அடிப்படையிலும் சர்வதேச சமூகத்துடனான எங்களின் ஆழமான ஈடுபாட்டை கருத்தில்கொண்டும் இலங்கை , பேரவையின் ஏனைய பொறிமுறைகளுடன் ஆக்கபூர்வமான ஈடுபாட்டை தொடர்ந்தும்பேணும் என்றார்.

## பிள்ளையான்...

விசாரணை அவசியம் என கோருபவர்களும் அதற்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்களும் தற்போதைய அரசாங்கத்திலேயே அங்கம் வகிக்கின்றனர்.

சனல் 4 வெளிப்படுத்தலுக்கமைய, பிள்ளையானும் ஏப்ரல் 21 தாக்குதல் சூத்திரதாரிகளும் ஒரே சந்தர்ப்பத்தில் ஒரே சிறைச்சாலையில் இருந்துள்ளனர்.

பிள்ளையான் தொடர்பில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளின் மூலம் ஏப்ரல் 21 தாக்குதல் குறித்து இன்னும் விசாரிக்கப்பட வேண்டிய பகுதிகள் உண்டு என்பது புலப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சினால் பிள்ளையான் என அழைக்கப்படும் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் உள்ளிட்ட பலருக்கு நீண்டகாலமாக 35 இலட்சம் ரூபா வழங்கப்பட்டு வந்துள்ளது.

இந்த தொகை எதற்காக வழங்கப்பட்டது என்பது தொடர்பில் ஆராயப்பட வேண்டும். எனவே, இந்த தாக்குதல்கள் குறித்து சுயாதீன விசாரணையொன்று அவசியமாகின்றது.

அத்துடன், ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கில் இத்தகைய சதிகளை மேற்கொண்டு, இனவாதத்தை தூண்டிவிடுபவர்களுக்கு நிச்சயமாக தண்டனை வழங்கப்பட வேண்டும் எனகூம் குறிப்பிட்டுள்ளார்.

## ஹோட்டலில்..

சிங்கப்பூரிலுள்ள நட்சத்திர விடுதியொன்றில் தனது மனைவியை வெட்டிக் கொன்ற இலங்கையர் ஒருவர், பொலிஸ் நிலையத்துக்கு சென்று சரணடைந்துள்ளார்.

கத்தோங்கில் உள்ள ஹோட்டலில் இந்த கொலைச் சம்பவம் நடந்தது.

இஷான் தாரக கோட்டகே (வயது 30) என்பவர், தனது மனைவி தியவின்னகே செவ்வந்தி மதுகா குமாரியை (வயது 32) செப்டெம்பர் 09 ஆம் திகதி காலை 10.45 மணி முதல் மாலை 4.42 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில்,கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டார்.

நேற்று (11) கணவர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு, குற்றப்பத்திரிகை கையளிக்கப்பட்டது. கொலை எப்படி செய்யப்பட்டது என்று குற்றப்பத்திரிகையில் குறிப்பிடப்படவில்லை.

கொலைக் குற்றம் சாட்டப்பட்ட இலங்கையர், நீதிமன்றத்தில் வீடியோ வழியாக முற்படுத்தப்பட்டார்.

விசாரணை, காட்சி மறுபரிசீலனை மற்றும் காட்சிப் பொருட்களை மீட்டெடுப்பதற்காக அவரை வெளியே அழைத்துச் செல்ல அனுமதியுடன் அவரை ஒரு வாரம் காவலில் வைக்க அரசுத் தரப்பு விண்ணப்பித்தது.

குற்றம் சாட்டப்பட்டவர் மொழிபெயர்ப்பாளர் மூலம் இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தில் சட்டத்தரணி ஒருவரை ஈடுபடுத்துவதற்கு பேசுமாறு கோரியதோடு, தமக்கு சட்டத்தரணி ஒருவரை வழங்குமாறும் அரசிடம் கோரினார்.

அவர் செப்டெம்பர் 18ஆம் திகதி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

குற்றம் சாட்டப்பட்டவர் சனிக்கிழமை மாலை 5.05 மணியளவில் மரைன் பரேட் அருகிலுள்ள காவல் நிலையத்துக்குச் சென்று, ஹோட்டலில் தனது மனைவியைக் கொன்றதாக காவல்துறை அதிகாரிகளுக்குத் தெரிவித்தார். இதையடுத்து அவர் கைது செய்யப்பட்டார்.

பொலிஸார் வந்தபோது ஹோட்டல் அறையில் 32 வயதுடைய பெண், வெட்டுக் காயத்துடன் அசையாமல் கிடந்தார். அவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் என்று சொல்லப்பட்டது. சம்பவத்துக்கு பயன்படுத்தப்பட்டதாக நம்பப்படும் கத்தி ஒன்று ஹோட்டல் அறையில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

குற்றம் நிரூபிக்கப்பட்டால், மேற்படி இலங்கையர் மரண தண்டனையை எதிர்கொள்வார்.





வரலாற்று சிறப்பு வாய்ந்த உடப்பு ஸ்ரீ ருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீபார்த்தசாரதிப் பெருமாள் திரௌபதியம்மன் ஆலயத்தின் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு பாலஸ்தான நிகழ்வு நேற்று முன்தினம் (10) நடைபெற்றது.

படங்கள்: உடப்பு நிருபர்

# பௌத்த மதத்துக்கு அரசியலமைப்பிலுள்ள முக்கியத்துவம் நடைமுறையில் இல்லை

## பதவிகளுக்காகவும் ஆட்சி அதிகாரத்துக்காகவுமே பயன்படுத்தப்பட்டுள்ளதாக சஜித் குற்றச்சாட்டு



ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவிகளைப் பெறுவதற்கும் அரச அதிகாரத்தைப் பெறுவதற்காகவுமே கடந்த காலங்களில் பௌத்த சமயம் பயன்படுத்தப்பட்டது. இது தவறான விடயமாகும். அரசியலமைப்பில் கூட பௌத்த மதத்துக்கு சிறப்பிடம் உண்டு என்று கூறப்பட்டாலும் அது முறையாக செயற்படுத்தப்படுவதில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

காலி மாகாண பிரிவுக்கான பிரதி பிரதம சங்கநாயக்க தேரர் பிரேமரத்ன நாயக்க தேரருக்கு பதவிக்கான நற்சான்றிதழ் பத்திரம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (10) இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

விகாரைகளின் அபிவிருத்தி முக்கியமில்லை என்று ஒரு கருத்தோட்டம் உருவாகி வருகிறது. விகாரைகளை மையமாக வைத்து நன்கொடையாளர்கள் மற்றும் செல்வந்தர்களின் உதவியுடன் தூபிகளை நிர்மாணிக்கும் வேலைத்திட்டத்தை தாம் செயல்படுத்தினாலும், அதை விமர்சித்து சமூக வலைதளங்கள்மூலம் சேறுபூசும் பிரசாரம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அரசாங்க நிதி இதற்குப் பயன்படுத்தப்படவில்லை என்பதால் சில பௌத்தர்கள் கூட இதை விமர்சித்தார்கள். இந்த கபட பொறாமைத்தனத்தால் சம்புத்த சாசனத்தை ஒரு போதும் பாதுகாக்க முடியாது.

கடந்த காலங்களில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவிகளைப் பெறுவதற்கும் அரச அதிகாரத்தைப் பெறுவதற்கும் பௌத்தம் பயன்படுத்தப்பட்டது. இவ்வாறு செயற்படக் கூடாது. அரசியலமைப்பில் கூட பௌத்த மதத்துக்கு சிறப்பிடம் உண்டு என்று கூறப்பட்டாலும் அது முறையாக செயற்படுத்தப்படுவதில்லை. நாட்டின் தலைவர் உட்பட ஏனையவர்களும் மிக உயர்ந்த நாட்டின் சட்டங்களையும் மீறி மிஹிந்தலை புனித பூமி, திம்புலாகல விகாரை உட்பட பல மத வழிபாட்டுத் தலங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு சிவப்பு எச்சரிக்கை பத்திரங்கள் கூட அனுப்பப்பட்டுள்ளன.

தற்போதைய எதிர்க்கட்சி அரசியல் இலக்குகளை அடைய மதத்தை பயன்படுத்தாது சமூகங்களுக்கும் மதங்களுக்கும் இடையே அமைதியான சூழல் நிலவும். தேசிய பாதுகாப்பு கூட பாதுகாக்கப்படுகிறது. கடந்த கால ஆட்சியாளர்கள் தேசிய ஒற்றுமைக்குப் பதிலாக தேசிய ஒற்றுமையீனத்தைப் பரப்பி மத, இனங்களுக்கு இடையே வெறுப்பை ஏற்படுத்தியது.

தேசிய ஒருமைப்பாடு, இறையாண்மை, பிரிவினைவாதமற்ற தன்மை என்பன வெறும் காகிதங்களுக்குள் மட்டுப்படுத்தப்படாமல் ஒவ்வொரு இலங்கையர்களின் இதயத்திலும் இருக்க வேண்டும். அப்போதுதான் நாடு பாதுகாப்பாக இருக்கும்.

நாட்டை மீளக் கட்டியெழுப்புவதில் இலங்கைப் பிரஜையாக மாத்திரமன்றி உலகளாவிய பிரஜையாக உருவாக்கும் பயணம் சிறுவயதிலேயே மேற்கொள்ளப்பட வேண்டும்.

மத வழிபாட்டுத் தலங்களில் நாட்டின் இளைஞர்களுக்கு புதிய தொழில்நுட்பத்தை வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும். நாகரீகமான நல்லொழுக்கமுள்ள மக்கள் சமூகத்தை கட்டியெழுப்பும் வகையில், மதங்களை மையமாகக் கொண்ட மத போதனைகளின் செய்தியை வழங்கும் அதேவேளை, புதிய தொழில்நுட்பத்தின் மூலம் உயர்கல்வியை வழங்கும் நிலையங்கள் நிறுவப்படும்.

நாடு சீர்பெற வேண்டுமானால் நாமும் சீர்பெற வேண்டும். யார் உண்மையிலேயே மக்களுக்காக உழைக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் திறன் நாட்டு மக்களுக்கு இப்போது உள்ளது. இது வர்த்தமானிகள், சுற்றறிக்கைகள், குழுக்களுக்கு என்று மட்டுப்படாமல் நடைமுறையில் நாட்டுக்கு யார் உழைக்க வேண்டும் என்பதை தீர்மானிக்க வேண்டிய தருணம் எழுந்துள்ளது என்றார்.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் ஆவணி மாதம் 26ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

**மேஷம்:** யாரையும் நம்பி புதியதொழில் வியாபாரங்களில் இறங்க வேண்டாம். வாகனப் பயணங்களில் கவனம் வேண்டும்.

**ரிஷபம்:** உங்கள் தேவைக்கான பணம் கிடைக்கும். மனத் துணிவுடன் உங்கள் காரியங்களில் வெற்றி கொள்வீர்கள்.

**மிதுனம்:** யாருக்கும் வாக்களிக்காதீர்கள். கடன் கொடுப்பது, பெறுவது சில பிரச்சினைகளை ஏற்படுத்தும். எச்சரிக்கை வேண்டும்.

**கடகம்:** மனதில் ஒருவித பய உணர்வு படபடப்பு தோன்றும். வீண் டென்ஷன் வேண்டாம். பொறுமையாக இருங்கள்.

**சிம்மம்:** தேவையற்ற பயணங்களையும் செலவுகளையும் குறைத்துக் கொள்ளுங்கள். வீண் டென்ஷன் வேண்டாம்.

**கன்னி:** தொழில் வியாபார அதிர்ஷ்டங்களை அடைவீர்கள். நினைத்த காரியத்தை வெற்றியுடன் நிறைவேற்றுவீர்கள்.

**துலாம்:** நீங்கள் தொழிலில் எதிர்பார்த்த நன்மைகள், உயர்வுகள் கிடைக்கும் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டு.

**விருச்சிகம்:** இன்று உங்கள் உழைப்புக்கு முக்கியத்துவம் கொடுக்காவிட்டால் பொருளாதாரச் சிக்கல்களை சந்திப்பீர்கள்.

**தனுசு:** எதற்கும் அவசரம் வேண்டாம். மௌனம் காப்பது, தேவையற்ற டென்ஷனால் மனதையும் உடலையும் கெடுத்துக் கொள்ளாதீர்கள்.

**மகரம்:** தடைப்பட்டிருந்த பயணத்தால் நன்மைகளை அடைவீர்கள். மனதை மகிழ்விக்கும் பல சம்பவங்கள் நடந்தேறும்.

**கும்பம்:** சுயத்தொழில் மூலம் நன்மைகள், இலாபங்கள் உண்டு. உடல்,மன நோய்களால் சற்று தொந்தரவுகள் உண்டு.

**மீனம்:** வீணான மனக் கவலைகளை விட்டு அமைதியுடன் இருங்கள். பயணங்களை குறைத்துக்கொள்வது நல்லது.

**திதி:** திரயோதசி பி.இ.2.21 வரை பின் சதுர்தசி
**நட்சத்திரம்:** ஆயில்யம் பி.ப.11.01 வரை பின் மகம்
**யோகம்:** சித்த யோகம பி.ப.11.01 வரை பின் மரணயோகம்
**வார சூலை:** வடக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது
**நல்ல நேரம்:** மு.ப. 8.02 – 9.02 மணிவரை
**ராகு காலம்:** 3.02 – 4.32 மணிவரை
**எமகண்டம்:** 9.02 – 10.32 மணிவரை
**குளிகை:** 12.02 – 1.32 மணிவரை
**சந்திராஷ்டமம்:** தனுசு ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்.
**தன அதிர்ஷ்டம்:** பூசம்,அனுஷம், உத்தரட்டாதி (பிறந்தவர்களுக்கு)
**விசேட தினம்:** பிரதோஷ விரதம்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325, 078-6759739



**ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் அண்மையில் எழுதி வெளியிட்ட பத்திகளின் தொகுப்பான 'சிதமு'(சிந்திப்போம்) நூலின் பிரதியை நேற்று (11) வரலாற்று சிறப்பு மிக்க கண்டி மல்வத்து மகா விகாரையின் சங்கைக்குரிய திப்பட்டுவாவே ஸ்ரீசுமங்கல மகாநாயக்க தேரரை சந்தித்து கையளித்தார். இதன்போது மல்வத்து மகாநாயக்க தேரர் அன்பளிப்பொன்றையும் கையளித்திருந்தார்.**

## வி.பி. கணேசன் ஞாபகார்த்த புலமைப்பரிசில் கருத்தரங்கு

மேல் மாகாண தந்தை செல்வா நற்பணி மன்றத்தால் வருடாந்தம் நடத்தப்படும் வி.பி. கணேசன் ஞாபகார்த்தமாக இலவச புலமைப் பரிசில் கருத்தரங்கு மன்றத் தலைவர் லயன் ரவிந்திரன் தலைமையில் எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்த கருத்தரங்கு கொட்டாஞ்சேனை, கிறேண்ட் சிட்டி அரிமா சங்கத்தால் நடத்தப்படவுள்ளது.

இதேவேளை, 24ஆம் திகதியன்று காலை 8.30 மணிக்கு நடைபெறும் கருத்தரங்கு மேல் மாகாண தந்தை செல்வா நற்பணி மன்றத்தால் கொழும்பு கலைமகள் வித்தியாலயத்தில் நடத்தப்படவுள்ளது.

இதன்போது ஐந்து சமூக சேவையாளர்கள் 'பொற்மணி செம்மல்' விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். இதற்கான ஒழுங்குகளை நிர்வாகச் செயலாளர் திருமதி. ஆ. புவனேஸ்வரி மற்றும் பொதுச் செயலாளர் எஸ்.கே. தளையரட்ணம் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர்.

# தவச்செல்வனின் இரு நூல்கள் வெளியீடு

அஷ்ரப் ஏ. சமத்





மலையக மகளிர் மன்ற அனுசரணையில் ஆசிரியர் சு.தவச்செல்வனின் இரு நூல்களின் அறிமுக விழா கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் வினோதன் மண்டபத்தில் சிரேஷ்ட சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திரா தலைமையில் நேற்று முன்தினம் (10) இடம்பெற்றது.

"ஆடுபாலம்" மற்றும் "இருநூறு வருடங்களாக மலையக சமூகமும் இலக்கியமும்" ஆகிய இரு நூல்களே இவ்வாறு வெளியிடப்பட்டன.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக சண்முகப் பிரியா கார்த்திக் (தலைவி எஸ்.கே.எம். வணிக குழுமம்) கலந்துகொண்டதுடன் நூலின் முதல் பிரதியை இலட்சுமணன் வேலு (கணக்காளர் வரி ஆலோசகர்) பெற்றுக் கொண்டனர்.

வரவேற்புரையை லுணுகலை ஸ்ரீ, வாழ்த்துறையை ஞானம் தி.ஞானசேகரன், கவிஞர் சுப்ரமண்ய செல்வா, நூல் அறிமுகம் திருமதி வசந்தி தயாபாரன், கவிஞர் மல்லிகைப்பு சந்தி திலகர், பதுளை சேனாதிராஜா, கலாபூஷணம் கே.பொன்னுத்துரை ஆகியோர்கள் உரையாற்றினார்கள்.

# பெண்ணின் கைப்பையிலிருந்து அகப்பட்டது கைவிலங்கு

ஏ.ஏ.எம்.பாயிஸ்

இளம் பெண்ணொருவர் தனது கைப்பையில் கை விலங்கு சோடி ஒன்றை மறைத்து வைத்திருந்த நிலையில் நேற்று முன்தினம்(10) அக்கைவிலங்கு அகப்பட்டு குறித்த பெண் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த இளம் பெண்ணின் வீட்டில் போதைப்பொருள் இருப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றையடுத்து இவரது வீட்டில் சோதனை நடத்தியபோது இவரது கைப்பையில் இருந்து இந்தக் கைவிலங்கை மீட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இவ்விடயம் தொடர்பில் எம்பிலிப்பிட்டிய பொலிஸார் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



**தேர்தல் ஆணைக்குழுவின் புதிய உறுப்பினராக சட்டத்தரணி திருமதி அனுசுயா சண்முகநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தனது கடமைகளை நேற்று (11) பொறுப்பேற்றுக்கொண்டார்.**

# சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 11 கோடி ரூபா பெறுமதியான சிகரெட்டுகள் சுங்கப் பிரிவால் கைப்பற்றல்



சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட 11 கோடி ரூபா பெறுமதியான வெளிநாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட 45 இலட்சம் சிகரெட்டுகள் நேற்று (11) கைப்பற்றப்பட்டுள்ளன.

சுங்கத்தின் அனுமதியின்றி சட்டவிரோதமாக இந்தியாவிலிருந்து கொள்கலனில் மறைத்து துறைமுகத்துக்கு கொண்டுவரப்பட்டிருந்த நிலையில் சுங்க மத்திய புலனாய்வுத்துறை அதிகாரிகளினால் கொழும்பு, கிராண்ட்பாஸ், கிரே லைன் கொள்கலன் பிரிவிலிருந்து இவற்றை கைப்பற்றியதாக சுங்க ஊடகப் பேச்சாளர் சீவலீ அரெக்கொட தெரிவித்துள்ளார்.

இந்திய சுங்க புலனாய்வுப் பிரிவினால் இலங்கை சுங்க புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்கு பெற்றுக்கொடுத்த தகவலுக்கமைய இந்த சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், இந்த கொள்கலன் கடந்த 07ஆம் திகதி இந்தியாவின் துறைமுகத்திலிருந்து கொழும்பு துறைமுகத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

வத்தளை பிரதேசத்திலுள்ள இறக்குமதியாளர், ஒருவரினால் 100 சதவீதம் வெட்டப்பட்ட துணிகள் மற்றும் பிளாஸ்டிக் பொத்தான்கள் என்று சுங்க அதிகாரிகளுக்கு தெரிவித்து கொண்டுவரப்பட்டிருந்த, இந்த கொள்கலனில் அவ்வாறு எந்தப் பொருட்களும் இருக்கவில்லை என்று சுங்க ஊடகப் பேச்சாளர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த சிகரெட்டு தொகை இவ்வாறு கொழும்பு துறைமுகத்துக்கு விடுவித்துக்கொள்ள வேண்டுமெனில், 31 கோடியே 60 இலட்சம் ரூபா தீர்வை வரி வருமானத்தை அரசாங்கம் இலக்க நேரிடும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

குறித்த கொள்கலனை விடுவித்துக்கொள்வதற்கு வருகைத் தந்திருந்த இருவர் சுங்க அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் சுங்க புலனாய்வு அதிகாரிகளினால் இந்த சட்டவிரோத இறக்குமதி தொடர்பில், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# துறைமுகத்தில் தடைப்பட்டுள்ள 965 கொள்கலன்கள்

சுங்கப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள 965 கொள்கலன்களின் பரிசோதனை நடவடிக்கைகள் காலதாமதமானமையினால், அவை துறைமுகத்திலும் சுங்க பரிசோதனை பிரிவிலும் தடைப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. அதற்கான முறை மற்றும் ஒழுங்கு விதிகள் தொடர்பில் செயற்குழு பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. விசாரணைகளை நிறைவு செய்யாமை இதில் முக்கிய தாக்கத்தை செலுத்தியுள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுங்க மேன்முறையீட்டு செயற்பாடுகளுக்கு நீண்ட காலம் எடுப்பதால் இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் கடும் நெருக் கடிக்குள்ளாகியுள்ளதாகவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், சுங்க விசாரணை மற்றும் மேன்முறையீடுகள் குறுகிய காலத்தில் நிறைவு செய்யப்பட வேண்டும் என்பதுடன் அதனூடாக ஏற்றுமதியினால் நாட்டுக்கு வெளிநாட்டு வருவாய் கிடைப்பதில் ஏற்படும் தாமதத்தை தவிர்த்துக்கொள்வதற்கான வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ராஜகுமாரி மரணத்துடன் இடமாற்றப்பட்ட வெலிக்கடை பொலிஸ் பொறுப்பதிகாரி மீண்டும் அதே பதவிக்கு

## சந்தேகநபர்கள் மீதான அடையாள அணிவகுப்பு 18இல்

ராஜன் ராஜகுமாரி என்றழைக்கப்படும் வீட்டுப் பணிப்பெண்ணின் உயிரிழப்புச் சம்பவத்தை தொடர்ந்து இடமாற்றி அனுப்பி வைக்கப்பட்ட வெலிக்கடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மீண்டும் அதே பதவியில் அமர்த்தப்பட்டுள்ளமை தொடர்பில் தகவல் கிடைத்துள்ளதாக நேற்று (11) நீதிமன்றத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சேனக்க பெரேரா நீதிமன்றத்தின் முன்னிலையில் கருத்து தெரிவித்து இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ராஜன் ராஜகுமாரி என்றழைக்கப்படும் பணிப்பெண்ணின் உயிரிழப்பு தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள வெலிக்கடை பொலிஸ் அதிகாரிகள் நால்வரும் எதிர்வரும் 18ஆம் திகதிவரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகத்துக்கிடமான பொலிஸ் அதிகாரிகள் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தின் முன்னிலையில் ஆஜர்படுத்தியதன் பின்னர் நீதிமன்றத்தினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், பொலிஸ் அதிகாரிகள் இருவர் நேற்று அடையாள அணிவகுப்புக்குட்படுத்தப்பட்டுள்ளனர். எது எவ்வாறாயினும், பிரதிவாதிகள் எதிர்ப்பு வெளியிட்டமையினால் அந்த அணிவகுப்பை இரத்துச் செய்யுமாறு கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷண கெகுனுவல, சந்தேகநபர்களை எதிர்வரும் 18ஆம் திகதி அடையாள அணிவகுப்புக்குட்படுத்துமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023 செப்டெம்பர் 12ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# கம்பனிகளுக்கு தேவை கடிவாளம்!

இரத்தினபுரி, கஹவத்தை பொலிஸ் பிரிவிலுள்ள வெள்ளந்துர தோட்டத்தில் இளைஞன் ஒருவர் அவரது தோட்டக் காணியில் நிர்மாணித்த வீட்டை ஓய்வுபெற்ற இராணுவத்தினரால் நடத்திச் செல்லப்படும் தனியார் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த தரப்பினர் சென்று பலவந்தமாகத் தகர்த்தெறிந்த காணொளியொன்று தற்போது சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளது.

மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 08 பேர் ஒரே வீட்டில் வசித்து வந்துள்ளதாகவும் இந்நிலையில், தமக்கான வீடொன்றைப் பெற்றுத்தருமாறு கடந்த 2019 ஆம் ஆண்டிலிருந்து தோட்ட முகாமையாளரிடம் கோரி வருவதாகவும் பாதிக்கப்பட்ட தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த நான்கு தலைமுறையாக தோட்டக் காணியில் பயிர்ச்செய்கை மேற்கொண்டு வருவதாகவும் அந்தக் காணியில் நான்கு தினங்களுக்கு முன்னர் தற்காலிக வீடொன்றை அமைத்துக்கொண்டதாகவும் குறித்த தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், பலவந்தமாக தோட்டத்தில் ஏன் வீடு கட்டியதாக தோட்ட முகாமையாளர் கேள்வி எழுப்பியதாகவும் சில தினங்களுக்கு முன்னர் தனியார் பாதுகாப்புப் பிரிவினர் என்று கூறிக்கொள்ளும் தரப்பினர் வீட்டை உடைப்பதற்காக வந்ததாகவும் எனினும், தோட்ட மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததையடுத்து அவர்கள் சென்றுவிட்டதாகவும் பாதிக்கப்பட்ட தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மீண்டும் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை தனியார் பாதுகாப்பு நிறுவன உத்தியோகத்தர்கள் என்று கூறிக்கொண்டு சுமார் 25 பேரளவில் தோட்டப் பகுதிக்கு வந்து வீட்டை உடைத்துவிட்டுச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.ஏற்கனவே மாத்தளை, ரத்வத்தை தோட்டத்தில் இதனை ஒத்த சம்பவம் நடந்து அதற்கே தீர்வு கிடைக்கப்படாத நிலையில், இப்போது இந்தச் சம்பவம் நடந்திருக்கிறது.

இரத்தினபுரி, வெள்ளந்துர தோட்டத்தில் அரங்கேற்றப்பட்டுள்ள இந்த மிருகத்தனமான செயல்- அடக்குமுறையின் மற்றுமொரு வெளிப்பாடாகும். அதுவும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடர் ஜெனிவாவில் நேற்று ஆரம்பமாகிய நிலையில் ஒரு நாள் முன்னதாக இந்தச் சம்பவம் அரங்கேறியுள்ளது.

இதுவே , மலையக பெருந்தோட்ட மக்கள் எவ்வாறு அடக்கி ஆளப்படுகின்றனர், ஒடுக்கப்படுகின்றனர், நில உரிமை இல்லாததால் அவர்கள் எவ்வாறான நெருக்கடிகளுக்கு உள்ளாகின்றனர் என்பதற்கு ஒரு சான்று.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்க இழுத்தடிப்புச் செய்யும் சில தோட்ட நிர்வாகங்கள், ஓய்வுபெற்ற படை அதிகாரிகளை சம்பளத்துக்கு அமர்த்தி, அவர்கள் ஊடாக நிர்வாகத்தை முன்னெடுத்து வருவது, எதிர்காலத்தில் தோட்டங்களில் இராணுவ ஆட்சிக்கு வழிவகுக்கும் அபாயமும் உள்ளது.

இரத்தினபுரி, வெள்ளந்துர தோட்டத்தில் இடம்பெற்றுள்ள இந்தச் சம்பவத்தை தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் உட்பட மலையகத் தலைவர்கள் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

தோட்டக் காணியில் சட்டவிரோதமாக குடியிருப்பு அமைக்கப்பட்டால், அதனை சட்டரீதியாகக் கையாண்டு, சட்டரீதியில் முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டு, நீதிமன்றம் ஊடாகவே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மாறாக, தோட்ட நிர்வாகம் சட்டம், ஒழுங்கை கையில் எடுத்து செயற்பட முடியாது. நிர்வாகம் சட்டரீதியிலான அணுகுமுறையை கையாளவில்லை என்பதை மனோ கணேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான சம்பவங்கள் மலையகத்தில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக நடந்துகொண்டுதான் இருக்கின்றன. ஆனால், பல்வேறு இடங்களிலும் சிற்சில காரணங்களுக்காக தலைகுனிந்து செல்லவேண்டிய நிலைமை அப்பகுதி வாசிகளுக்கு இருக்கிறது. இப்படியான சம்பவங்களுக்கு நீதி கேட்டு நீதிமன்றம் செல்ல முடியாத நிலைமை, பொருளாதார நிலைமை, அப்படியே சட்டநடவடிக்கைகளுக்குச் சென்றாலும் தொழில் பறிபோய்விடும். இப்படியான பல காரணங்களால் மலையகப் பெருந்தோட்ட மக்கள் சொல்லொணா துயரங்களை தங்களுக்குள் அடக்கி வாழ்ந்து வருகின்றனர்.

இந்தவகையான சம்பவங்களுக்கு அரசியல்வாதிகள் அப்பகுதிக்குச் சென்று சண்டித்தனம் காட்டுவதோ அல்லது அதிகாரிகளை திட்டித் தீர்ப்பதோ தீர்வாகாது. இவ்வாறானவற்றை பொதுப் பிரச்சினையாகக் கருத்திற்கொண்டு அவற்றைத் தீர்க்க மலையக அரசியல் தலைவர்கள் ஒன்றுபடவேண்டும்.'ஊர்கூடி தேர் இழுப்பதுபோல' மலையகத்தின் அரசியல்வாதிகள், கல்விமான்கள்,நலன்விரும்பிகள் அனைவரும் ஒன்றிணைந்து, ஒரே மேசையில் அமர்ந்து தீர்மானங்களை எடுத்து அதனை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவந்தால் கம்பனிகளின் அராஜகத்தைக் கட்டுக்குள் கொண்டுவரலாம். கம்பனிகளின் காடைத்தனங்களுக்கு கடிவாளம் இடப்படவேண்டும்.

## இன்றைய நாளில்...

- 1933 – அணுக்கரு தொடர்வினை குறித்த கருத்தை முதன் முதலாக லியோ சிலார்ட் அறிவித்தார்.
- 1948 – முகமது அலி ஜின்னா மறைந்த அடுத்த நாள் இந்திய இராணுவம் பாகிஸ்தானின் ஐதராபாத் மாநிலத்தினுள் நுழைந்தது. ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.
- 1959 – லூனா 2 விண்கலத்தை சோவியத் ஒன்றியம் ஏவியது. சந்திரனை அடைந்த முதலாவது விண்கலம் இதுவாகும்.
- 1992 – நாசாவின் எண்டெவர் விண்ணோடம் ஆபிரிக்க - அமெரிக்கப் பெண்ணான மேய் சரோல் ஜமிசன் என்பவருடன் விண்ணுக்கு ஏவப்பட்டது.



# ஜி20 உச்சி மாநாடு:
## சீனாவின் கனவுத் திட்டத்திற்கு சவாலா?



அமெரிக்கா, சவூதி அரேபியா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களுடன் இணைந்து இந்தியா - மத்திய கிழக்கு - ஐரோப்பா பொருளாதார வழித்தடத்தை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கடந்த சனிக்கிழமை புது டில்லியில் தொடக்கி வைத்தார்.

இந்தியா முதல் அமெரிக்கா, ஐரோப்பா முதல் மத்திய கிழக்கு வரையிலான நாடுகளின் தலைவர்கள் இதை ஒரு வரலாற்று ஒப்பந்தம் என்று அழைக்கின்றனர்.

இது மத்திய கிழக்கில் செழிப்பை ஏற்படுத்தும் ஒப்பந்தம் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கூறியுள்ளார்.

இரண்டு கண்டங்களின் துறைமுகங்களை இணைப்பதன் மூலம் மத்திய கிழக்கில் அதிக செழிப்பு, ஸ்திரத்தன்மை மற்றும் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் மிகப்பெரிய ஒப்பந்தம் இது என்று அவர் தெரிவித்தார்.

வர்த்தகத்தைத் துரிதப்படுத்தும் நேரடிப் பாதையாக இது இருக்கும் என்று ஐரோப்பிய ஆணைக்குழுவின் தலைவர் உர்ஸுலா வோன் டேர் லேயன் கூறியுள்ளார்.

இந்தியா-மத்திய கிழக்கு-ஐரோப்பா பொருளாதார வழித்தடம் என்றால் என்ன? அது ஏன் முக்கியமானது ?

***பிரதமர் மோடி தொடக்கி வைத்தது என்ன?***

இந்தியாவை மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பாவுடன் இணைக்கும் ரயில்-துறைமுக ஒப்பந்தம் எவ்வளவு முக்கியமானது ?

அமெரிக்கா, வளைகுடா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களுடன் இணைந்து மிகப்பெரிய, இலட்சியபூர்வமான உள்கட்டமைப்புத் திட்டத்தை பிரதமர் மோடி தொடக்கி வைத்தார்.

இந்தியா, மத்திய கிழக்கு, ஐரோப்பாவை ரயில் மற்றும் துறைமுக வலையமைப்பு மூலம் இணைப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கம்.

இந்தத் திட்டத்தின் கீழ் மத்திய கிழக்கில் அமைந்துள்ள நாடுகள் ரயில் வலையமைப்பின் மூலம் இணைக்கப்பட்டு, பின்னர் அவை கப்பல் பாதை மூலம் இந்தியாவுடன் இணைக்கப்படும். இதன் பிறகு இந்த வலையமைப்பு ஐரோப்பாவுடன் இணைக்கப்படும்.




செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க தேசிய பாதுகாப்பு துணை ஆலோசகர் ஜோன் ஃபைனர், இந்தத் திட்டத்தின் முக்கியத்துவத்தை விளக்கினார்.

“இது வெறும் ஒரு ரயில் திட்டம் மட்டுமல்ல, இது கப்பல் மற்றும் ரயில் திட்டம். இந்தத் திட்டம் எவ்வளவு மதிப்புமிக்கது; இலட்சியபூர்வமானது; முன்னோடியானது என்பதை மக்கள் புரிந்துகொள்வது மிகவும் முக்கியம்" -என்றார் அவர்.

“இந்த ஒப்பந்தம் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் உள்ள நாடுகளுக்குப் பயனளிக்கும். உலக வர்த்தகத்தில் மத்திய கிழக்கு நாடுகள் முக்கிய பங்கு வகிப்பதற்கு இது உதவும்'' - என்று அவர் கூறினார்.

***இந்த ஒப்பந்தத்தால் என்ன மாற்றம் ஏற்படும்?***

இந்தியா, மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கிடையிலான இந்த ஒப்பந்தம் அடிப்படையில் ஓர் உட்கட்டமைப்புத் திட்டமாகும்.

இதன் கீழ் துறைமுகங்கள் முதல் ரயில் பாதை இணைப்புகள் வரை எல்லாமே கட்டப்படவுள்ளன. இந்தியாவிலிருந்து ஐரோப்பாவிற்கு செல்லும் ரயில் பாதைத் தொடர்பு மிகவும் விரிவானது.

ஆனால், மத்திய கிழக்கைப் பார்த்தால் அங்குள்ள ரயில் பாதைகள் ஒப்பீட்டளவில் விரிவாக இல்லை. இதன் காரணமாக சரக்குப் போக்குவரத்து பெருமளவில் சாலை அல்லது கடல் வழியாகவே செய்யப்படுகிறது.

ரயில்வே பாதைகள் இணைக்கப்பட்டால் மத்திய கிழக்கின் ஒரு மூலையில் இருந்து மற்றொரு மூலைக்கு சரக்குகளைக் கொண்டு செல்வது எளிதாகும்.

இதனுடன் கூடவே இந்தத் திட்டத்தால் உலகளாவிய வர்த்தகத்திற்கான புதிய கப்பல் போக்குவரத்து வழியையும் வழங்க முடியும். ஏனெனில், தற்போது இந்தியா அல்லது அதைச் சுற்றியுள்ள நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் சூயஸ் கால்வாய் வழியாக மத்திய தரைக்கடலை அடைகின்றன. இதன் பிறகு அவை ஐரோப்பிய நாடுகளைச் சென்றடைகின்றன.

இதனுடன், அமெரிக்க கண்டத்தில் அமைந்துள்ள நாடுகளுக்குச் செல்லும் பொருட்கள் மத்தியதரைக் கடல் வழியாக அட்லான்டிக் பெருங்கடலில் நுழைந்து, பின்னர் அது அமெரிக்கா, கனடா அல்லது லத்தீன் அமெரிக்க நாடுகளை அடைகின்றன.

“தற்போது மும்பையில் இருந்து ஐரோப்பாவுக்கு புறப்படும் கொள்கலன்கள் சூயஸ் கால்வாய் வழியாக ஐரோப்பாவை அடைகின்றன. எதிர்காலத்தில் இவை டுபாயில் இருந்து இஸ்ரேலில் உள்ள ஹைஃபா துறைமுகத்திற்கு ரயிலில் செல்ல முடியும்.

இதற்குப் பிறகு அவை ஐரோப்பாவைச் சென்றடையும். இதனால் நிறைய நேரத்தையும் பணத்தையும் மிச்சப்படுத்த முடியும்" - என்று யூரேசியா குழுமத்தின் தெற்காசிய நிபுணர் பிரமீத் பால் சௌத்ரி கூறினார்.

தற்போது சர்வதேச வர்த்தகத்தின் 10 சதவீதம் சூயஸ் கால்வாயை நம்பியுள்ளது. இங்கு ஒரு சிறிய பிரச்சினை ஏற்பட்டாலும்கூட சர்வதேச வர்த்தகத்திற்கு அது பெரும் சவாலாக உள்ளது. எவர் கிவன் என்ற பெரிய சரக்குக் கப்பல், 2021ஆம் ஆண்டில் சூயஸ் கால்வாயில் பக்கவாட்டில் சிக்கிக் கொண்டது. இந்தச் சம்பவம் சர்வதேச வர்த்தகத்திற்கு நெருக்கடியை உருவாக்கியது. இந்தப் பிராந்தியத்தின் வழியாகச் செல்லும் சரக்குகளை ஒரு வார காலத்திற்கு இது தாமதப்படுத்தியது.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் கடலுக்கு அடியில் ஒரு கேபிள் போடப்படும். அது இந்தப் பகுதிகளை இணைத்து, தொலைத்தொடர்பு மற்றும் தரவு பரிமாற்றத்தை விரைவுபடுத்தும் என்று ஏ.எவ்.பி. செய்தி நிறுவனம் தெரிவிக்கிறது.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி மற்றும் போக்குவரத்துக்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

உலகிற்கு ஒரு புதிய வர்த்தகப் பாதையை இது கொடுக்கும் என்பதால் இந்த ஒப்பந்தம் ஆக்கபூர்வமானதாக இருக்கும் என்று சர்வதேச வர்த்தக நிபுணர் டாக்டர் பிரபீர் டே கருதுகிறார்.

"இந்த ஒப்பந்தம் உலகிற்கு ஒரு புதிய வர்த்தகப் பாதையை வழங்கும். சூயஸ் கால்வாய் வழியை நாம் சார்ந்திருப்பதை இது குறைக்கும்.

அத்தகைய சூழ்நிலையில் அந்த வழித்தடத்தில் எப்போதாவது ஏதேனும் சிக்கல் எழுந்தால், அது சர்வதேச வர்த்தகத்திற்கு அச்சுறுத்தலாக இருக்காது. ஏனெனில், மாற்று வழி இருக்கும்.

இதனுடன், சவூதி அரேபியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் ரயில் பாதைகள் சரியாக இல்லை. இந்தப் பாதை அமைக்கப்பட்டால் மத்திய கிழக்கில் இருந்து எண்ணெய் கொண்டு வருவது நமக்கு எளிதாகிவிடும்'' - என்று டாக்டர் டே கூறினார்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கும் இது சாதகமானதாக இருக்கும் என்று சர்வதேச உறவுகள் நிபுணரும், ஜே.என்.யு. பேராசிரியருமான டாக்டர் ஸ்வரன் சிங் கருதுகிறார்.

"மத்திய கிழக்கு நாடுகளில் ரயில்வே நெட்வேர்க் நிறுவப்படுவதன் மூலம், இந்த நாடுகளின் நிலைமை மேம்படும். ஒருபுறம், உள்ளூர் மக்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

மறுபுறம், இது மத்திய கிழக்கு நாடுகளை ஒன்றுக்கொன்று நெருக்கமாகக் கொண்டுவரும். ஏனெனில், ரயில்பாதை இணைப்புகள் வணிகரீதியாக நாடுகளை நெருக்கமாக்குகின்றன - என்று அவர் குறிப்பிட்டார்.

“ஏதோவொரு விபரீத சூழல் ஏற்பட்டால், இரண்டு நாடுகளுக்குமிடையே விமானப் போக்குவரத்தை உடனடியாக நிறுத்த முடியும். ரயில்வே வழித்தடத்தில் இதைச் செய்வது அவ்வளவு எளிதானதல்ல. ஏனெனில், இது பொருளாதார இழப்பை ஏற்படுத்தும். இதுபோன்ற சூழ்நிலையில், நாடுகள் ஒன்றுக்கொன்று புரிந்து நடந்துகொள்ளும்" - என்று டாக்டர் ஸ்வரன் சிங் தெரிவித்தார்.

இந்த ஒப்பந்தம் அறிவிக்கப்பட்ட பிறகு இந்தியாவின் வர்த்தகத்தில் பெரிய ஏற்றம் ஏற்பட வாய்ப்புள்ளது.

ஆனால், இந்தப் பாதையின் வரவு இந்தியாவின் சர்வதேச வர்த்தகத்திற்கு எவ்வளவு ஊக்கமளிக்கும் என்பதை இப்போது மதிப்பிடுவது கடினம் எனக் கருதுகிறார் பிரபீர் டே.

“ஏனெனில், வணிகத்தின் வளர்ச்சி என்பது துரத்தைக் குறைப்பதால் மட்டுமே ஏற்பட்டுவிடாது. இதற்கு வேறு பல காரணிகளும் உள்ளன"- என்றார் அவர்.

***சீனாவின் சவால்***

இந்த ஒப்பந்தத்தைப் பற்றிப் பேசிய அமெரிக்க தேசிய பாதுகாப்புத் துணை ஆலோசகர் ஜோன் ஃபைனர், ‘‘இந்த ஒப்பந்தம் தொடர்பாக உலகம் முழுவதிலும் நேர்மறையான கருத்துகள் வெளியாகும்"- என்று நம்பிக்கை தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தில் ஈடுபட்டுள்ள நாடுகள் மட்டுமின்றி, உலகம் முழுவதிலும் இதுதொடர்பாக நேர்மறையான அணுகுமுறை இருக்கும் என்று நாங்கள் நினைக்கிறோம்'' - என்று அவர் கூறினார்.

இந்த ஒப்பந்தம் ஒரு முக்கியமான நேரத்தில் வந்துள்ளது. சீனாவின் பட்டுப்பாதை முன்முயற்சியை முறியடிக்க அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் விரும்புகிறார்.

ஜி20 குழுவிற்கு உள்ளே அவர் அமெரிக்காவை, வளரும் நாடுகளுக்கான மாற்று பங்காளியாகவும் முதலீட்டாளராகவும் முன்வைக்கிறார்.

பட்டுப்பாதைத் திட்டத்தின் மூலம் சீனா தனது செல்வாக்கு, முதலீடு மற்றும் வர்த்தகத்தை ஐரோப்பாவிலிருந்து ஆபிரிக்கா வரையிலும், ஆசியாவிலிருந்து லத்தீன் அமெரிக்கா வரையிலும் விரிவுபடுத்தியுள்ளது.

இந்த ஒப்பந்தம், சீனாவின் இலட்சிய திட்டமான பி.ஆர்.ஐ-க்கு வலுவான பதிலடி என்று அமெரிக்க சிந்தனைக் குழுவான தி வில்சன் மையத்தின் தெற்காசிய அமைப்பின் இயக்குனர் மைக்கேல் குகல்மேன் கருதுகிறார்.

"இந்த ஒப்பந்தம் செயற்படுத்தப்பட்டால் அது இந்தியாவை மத்திய கிழக்குடன் இணைக்கும். பெல்ட் அண்ட் ரோடு முன்முயற்சிக்கு சவாலாக விளங்கும் என்பதால் இந்த ஒப்பந்தம் ஒரு கேம் சேஞ்சராக இருக்கும் - என்று குகல்மேன் ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

***சீன ஆய்வாளர்கள் வெளியிட்டுள்ள சந்தேகம்***

இந்த ஒப்பந்தத்தின் அறிவிப்பு தொடர்பான செய்திக்குப் பிறகு சீன செய்தித்தாள் குளோபல் டைம்ஸ் ஒரு கட்டுரையை வெளியிட்டுள்ளது. அதில் அமெரிக்க முயற்சிகள் போதுமானவையல்ல என்று விவரிக்கப்பட்டுள்ளது.

சீனா தனது பட்டுப்பாதை முன்முயற்சித் திட்டத்தை 2008இல் தொடங்கியது. மேலும் இதன்கீழ் பல நாடுகளில் பணிகள் நடந்து வருகின்றன. அதேநேரத்தில், ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்கா தலைமையிலான இந்தத் திட்டம் 2023இல் தொடங்குகிறது.

அத்தகைய சூழ்நிலையில் சீனாவின் பட்டுப்பாதைத் திட்டத்தைக் காட்டிலும் வலுவான மாற்றுவழி இது என்று சொல்ல முடியுமா?

பி.ஆர்.ஐயுடன் ஒப்பிடுகையில் இந்தத் திட்டம் எங்கும் இல்லை என்று சொல்வது சரியானதுதான். ஆனால், நீண்டகால அடிப்படையில் பார்த்தால், இந்தத் திட்டம் உலகிற்கு சாதகமாக இருக்கும் என்று தான் நினைப்பதாக டாக்டர் ஸ்வரன் சிங் கூறினார்.

ஏனெனில், "அதன் நோக்கம் பி.ஆர்.ஐ.இல் காணப்படுவதைப் போல எந்தவொரு அரசு அல்லது கட்சியின் செல்வாக்கை உலகம் முழுவதும் பரப்புவது அல்ல" - என்று டாக்டர் ஸ்வரன் சிங் சுட்டிக்காட்டினார்.

"இதன் நோக்கம், விதிகள் அடிப்படையிலான, உலகளாவிய ஒழுங்குமுறைக்கேற்ப, ஒரு கட்டமைப்பை உருவாக்குவது. அதன்மீது எதிர்கால வர்த்தகம் கட்டமைக்கப்படும்.

ஏனென்றால், பி.ஆர்.ஐ. திட்டங்கள் எங்கு அமுல் செய்யப்படுகின்றனவோ அந்த நாடுகளில் சில காலத்திற்குப் பிறகு சீனா பற்றிய எதிர்மறையான கருத்துகள் உருவாவதைப் பார்க்க முடிகிறது. ஏனெனில், சீனாவின் நோக்கம் அந்த நாடுகளின் வளர்ச்சி அல்ல" -என்று அவர் குறிப்பிட்டார்.

**நன்றி - பிபிசி தமிழ்:**



# ரஷ்ய பிரஜையை தாக்கி பணம் கொள்ளையடிப்பு

## நால்வரை தேடி பொலிஸார் வலைவீச்சு

ஹபராதுவ, தல்பே பிரதேசத்தில் அமைந்துள்ள நிறுவனமொன்றுக்குள் வைத்து, ரஷ்ய பிரஜையொருவரை தாக்கி காயப்படுத்தியதாக கூறப்படும் ரஷ்யாவைச் சேர்ந்த மேலும் நால்வரை கைதுசெய்வதற்கு ஹபராதுவ பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தச் சம்பவத்தில், 39 வயதுடைய ரஷ்ய பிரஜை காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், தொடர்ந்து சிகிச்சைப் பெற்றுவருவதாக ஹபராதுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களான ரஷ்ய பிரஜைகள் நால்வரும் தேடப்பட்டுவருவதுடன், ரஷ்ய ரூபிளை இலங்கை ரூபாவுக்கு மாற்றிக்கொண்டிருந்த ரஷ்ய பிரஜையே இவ்வாறு தாக்குதலுக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்தப் பணப் பரிமாற்றத்தின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் முரண்பாடு வலுப்பெற்றதை தொடர்ந்தே இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

இதேவேளை, தன்னை தாக்கிய ரஷ்ய பிரஜைகள் தன்னிடமிருந்த 38 இலட்சம் ரூபாவை பெற்றுக்கொண்டதாகவும் பாதிக்கப்பட்ட நபர் பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மின்சார சபையில் மனிதவளப் பற்றாக்குறை

## லக்விஜயவுக்கு சீனப் பொறியியலாளர்களை இணைத்துக்கொள்ளும் தீர்மானம் இல்லை என மின்சார சபை அறிவிப்பு

மின்சார சபையில் மனிதவள பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் அந்த பதவி வெற்றிடங்களுக்கு பணியாளர்களை இணைத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் மின்சார சபையின் பொது முகாமையாளர் பொறியியலாளர் ரொஹான் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நுரைச்சோலை, லக்விஜய மின் உற்பத்தி நிலையத்துக்காக சீன பொறியியலாளர்களை சேவைக்கு இணைத்துக்கொள்ள எதிர்பார்த்துள்ளதாக சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டுவரும் ஆவணம் போலியானது என்றும் அது அடிப்படையற்றது என்றும் அவர் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில் விளக்கமளித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவ்வறிக்கையில், தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தற்போது மின்சார சபையில்நிலவும் மனிதவள பற்றாக்குறையை நிவர்த்தி செய் வதற்காக தேசிய பொறியியலாளர்களை இணைத்துக் கொள்வதற்காக முன்னெடுக்கப்பட்ட நேர்காணலில் தகைமைப் பெற்ற பொறியி யலாளர்களை இணைத்துக்கொள்வதற்கு தேவையான நடைமுறை செயற்பாடுகள் இடம்பெற்று வருவதுடன் நேர்காணலுக்காக முன்னிலையாக 400 பேரில் 19 பேரை தெரிவு செய்து சேவைக்கு இணைத்துக்கொள்வதற்கு தேவையான அனுமதியைப் பெற்றுக்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



மேலும், லக்விஜய மின் உற்பத்தி நிலையத்துக்கு சீன பொறியியலாளர்களை இணைத்துக் கொள்ளவுள்ளதாக வெளியாகியுள்ள செய்தி கள் போலியானவை என்பதுடன் பதவி வெற்றிடங் களுக்காக தேசிய பொறியியலாளர்களை சேவைக்கு இணைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப் படும். அதேபோன்று, வெளிநாட்டு பொறியியலாளர் களை இணைத்துக்கொள்வதற்காக அமைச்சோ அல்லது மின்சார சபையோ எவ்வித கொள்கை அடிப்படையிலான தீர்மானமோ அல்லது அனுமதியையோ பெற்றுக்கொள்ளவில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# "பேர வாவியை பாதுகாப்போம்" கருத்திட்டம் ஆரம்பம்





கொழும்பு மாநகரின் மத்தியில் அமைந்திருக்கும் பேர வாவி மற்றும் பேர வாவி கால்வாயைத் தூய்மைப் படுத்தி அபிவிருத்தி செய்யும் "பேர வாவியைப் பாதுகாப்போம்" கருத்திட்டத்தின் அங்குரார்ப்பண வைபவம் அண்மையில் பேர வாவி சீமாமாலக்கவில் இடம்பெற்றது.

பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் துறைமுகங்கள், கப்பல்துறை, விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மற்றும் சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர். அத்தோடு சுமார் 150 உள்நாட்டு வெளிநாட்டு அதிதிகளும் இந்த அங்குரார்ப்பண வைபவத்தில் கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம், இலங்கை துறைமுக அதிகார சபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை, மத்திய சுற்றாடல் அதிகார சபை, இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனி மற்றும் கொழும்பு மாநகர சபை ஆகிய நிறுவனங்களினால் இந்த அபிவிருத்தி வேலைத்திட்டம் கண்காணிக்கப்பட உள்ளது. அந்நிறுவனங்களினால் பெயரிடப் படும் பிரதிநிதிகள் குறித்த கருத்திட்ட நிறுவனத்துக்கு வேலைத்திட்டத்துக்கு தேவையான ஆலோசனைகளை வழங்கி வசதிகளை செய்துகொடுக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

Groepo Pte. Ltd நிறுவனத்தின் உள்நாட்டு கம்பனியான Groepo Lanka Bioscience (Pvt) Ltd இக்கருத்திட்டத்தை செயற்படுத்த இருக்கின்றது.

மனிதர்களின் தவறான செயற்பாடுகள் காரணமாக அரை நூற்றாண்டு காலமாகக் கட்டம் கட்டமாக மாசடைந்துவரும் பேர வாவியின் நீரைத் தூய்மைப்படுத்தி அதன் துர்நாற்றத்தை நீக்குவதற்கும் அதனைத் தொடர்ந்து பேணுவதற்கும் நீரின் தரத்தைப் பராமரிப்பதோடு அதனை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துவதற்கும் இக் கருத் திட்டத்தின் ஊடாக எதிர் பார்க்கப் பட்டுள்ளது. இவ் வேலைத் திட்டத்துக்கு இணையாக பேர வாவிக்கு மலசலகூட கழிவு நீர் மற்றும் திண்மக் கழிவுப் பொருட் களை அப்புறப்படுத்தும் வழி களை அடையாளம் கண்டு அவற்றுக்கு மாற்று முறைமைகளை அறிமுகப்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

இலங்கை அரசாங்கத்தின் எவ்வித நிதி முதலீடுகளும் இன்றி முன்னெடுக்கப்படும் இக்கருத்திட்டம் இந்நாட்டுக்கு நன்றிக்கடனாகவும் தற்போதைய நிதி நெருக்கடியில் இருந்து மீட்சி பெறுவதற்கான ஒத்துழைப்பாகவும் ஜப்பான் அரசாங்கம் அளிக்கும் பரிசே இதுவாகும். ஜப்பான் எப்போதும் இலங்கைக்கு உண்மையான நண்பனாக செயற்பட்டு வருகின்றது. 1951 செப்டெம்பர் மாதம் 06ஆம் திகதி சான் பிரான்சிஸ்கோ நகரில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டில் முன்னாள் ஜனாதிபதியும் அன்றைய நிதியமைச்சருமான ஜே.ஆர். ஜயவர்தன ஜப்பானுக்கு ஆதரவாக ஆற்றிய சொற்பொழிவையும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை நிதி நெருக்கடியில் இருந்து மீட்டெடுப்பதற்காக முன்னெடுக்கப்படும் முயற்சிகளைப் பாராட்டும் வகையிலுமே இந்த ஒத்துழைப்பு நல்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

# நல்லிணக்க நிலையம் திறந்து வைப்பு





பொரளை ஜும்ஆப் பள்ளிவாசலில் அதன் தலைவர் எம்.ஆர்.எம். அவ்தாத் தலைமையில் நல்லிணக்க நிலையம் திறந்து அண்மையில் வைக்கப்பட்டது.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா செயலாளர் அஷ்-ஷெய்க் அர்கம் நூரமித், நிதா பவுண்டேசன் செயலாளர் அஷ்-ஷெய்க் முர்ஷித் முலாபர் மற்றும் முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் மொஹமட் பைசல் இதன்போது உரையாற்றினர்.

பொரளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜானக விதானகே, லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் ஜி. வீரசூரிய, பெண்கள் வைத்தியசாலை பணிப்பாளர் கலாநிதி அஜித் தண்டநாராயணா, அரச அச்சக கூட்டுத்தாபன பிரதி அச்சகர் பி.எம்.என். பாலசூரிய ஆகியோர் இந்நிலையத்தைப் பார்வையிட்டனர்.

பொரளை ஸ்ரீசாரிபுத்தாராம விகாரையின் பிரதமகுரு பேராசிரியர் பல்லேகந்த ரத்னசார மகா தேரர், பொரளை முத்துமாரியம்மன் ஆலய பிரதம குரு எஸ். விநாயகர் குருக்கள், அஷ்-ஷெய்க் ஹசன் பரீட், பொரளை அனைத்து புனிதர் கல்லூரி அதிபர் சீ.சஜீவனி, வக்பு சபையின் தலைவர் எம்.எல்.எம். மொஹிதீன் ஹூசைன், பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.எச்.எம். பௌசி, பைசல் காசிம், மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான முஜிபுர் ரஹ்மான், திலங்க சுமதிபால மற்றும் சிரேஷ்ட ஊடகவியலாளர் லத்தீப் பாரூக் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# வடக்கில் மதவாதம்: மலையகத்தில் இனவாதம்

## அரசாங்கம் திட்டமிட்டு செயற்படுகின்றதா என்று இராதாகிருஷ்ணன் எம்.பி. கேள்வி

நுவரெலியா நிருபர்



இரத்தினபுரி பிரதேசத்தில் இடம்பெற்ற சம்பவத்துக்கு சமரசம் கிடையாது. காடையர்கள் அனைவரும் கைது செய்யப்பட வேண்டும். இதற்காக அனைவரும் கட்சி பேதங்களை மறந்து ஒன்றுபட வேண்டும். வடகிழக்கு பகுதிகளில் மதவாதத்தை கையில் எடுத்துக் கொண்டு அதனை கட்டுப்படுத்தாமல் கண்டும் காணாமல் இருக்கின்றது அரசாங்கம். மலையகத்தில் தொடர்ந்தும் பல பெருந்தோட்ட கம்பனிகள் காடையர்களை போல சட்டத்தை கையில் எடுத்துக் கொண்டும் செயற்படுகின்றார்கள். இதனையும் அரசாங்கம் கண்டு கொண்டதாக தெரியவில்லை. எனவே இது அரசாங்கத்தின் திட்டமிட்ட செயற்பாடா? என்ற சந்தேகத்தை எழுப்புவதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் நேற்று (11) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும், தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இரத்தினபுரி சம்பவத்தை ஒரு சாதாரண விடயமாக பார்க்க முடியாது. ஏனெனில் 1998ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 9ஆம் திகதி காடையர்களால் கட்டவிழ்த்து விடப்பட்ட சம்பவத்தால் ராசகலை, வெல்லவல அகஸ்லான்ட் வேவல்வத்தை மக்கள் தங்களுடைய வீடுகளையும் உடைமைகளையும் இழந்து வீதிகளுக்கு வந்தனர்.

அன்று நான் குறித்த பகுதிகளுக்கு 24.09.1998 விஜயம் செய்து நிலைமைகளை நேரடியாக பார்த்தேன். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கினோம். எனவே அதன் தாக்கம் எனக்கு நன்றாக தெரியும்.

எனவே இந்த விடயத்தை சாதாரணமாக பார்க்க முடியாது. பட்டப்பகலில் காடையர்கள் கூட்டமாக வந்து தாக்குதல் நடத்திவிட்டு செல்கின்றார்கள் என்றால் அதற்கு அனுமதி கொடுத்தது யார்? தோட்ட நிர்வாகத்தினர் செய்கின்றார்களா அல்லது காடையர்களை வைத்துக் கொண்டு அராஜகம் செய்து கொண்டிருக்கின்றார்களா? இதனையும் அரசாங்கம் கண்டும் காணாமல் இருக்கின்றது.

மாத்தளை சம்பவம் நடைபெற்றவுடன் பலரும் இது தொடர்பாக பேசினார்கள். அத்தோடு அதன் கதை முடிந்துவிட்டது. அரசாங்கமும் கண்டு கொள்ளவில்லை.

எனவே, இந்த சம்பவங்களின் பின்னால் அரசாங்கம் இருக்கின்றதோ என்ற ஒரு சந்தேகம் எனக்கு இருக்கின்றது. இது தொடர்பாக உரிய கவனம் செலுத்தி ஜனாதிபதி தலையீட்டுடன் உடனடியாக ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்ய வேண்டும்.

அந்த கூட்டத்தில் அனைத்து பெருந்தோட்ட கம்பனிகளும் பங்குபற்ற வேண்டும். அத்துடன் அனைத்து தொழிற்சங்கங்கள் வடகிழக்கு உட்பட அனைத்து தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் பங்குபற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அவ்வாறு செய்யாவிட்டால் இது தொடர்பாக அனைத்து தொழிற்சங்கங்களும் இணைந்து தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் இணைத்துக் கொண்டு ஒரு கலந்துரையாடலை ஏற்படுத்தி அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்பதோடு இந்த விடயத்தை சர்வதேசம் வரை கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்காக எந்த ஒரு தரப்பினருடனும் இணைந்து செயற்படுவதற்கு மலையக மக்கள் முன்னணி தயாராக இருக்கின்றது எனவும் கூறப்பட்டுள்ளது.

# அல்-ஹிஜ்ரா வித்தியாலயத்தில் அடிக்கல் நாட்டும் வைபவம்



அஷ்ரப் ஏ. சமத்

குருநாகல், தம்பதெனிய அல்-ஹிஜ்ரா வித்தியாலயத்தில் குவைத் நாட்டின் நன்கொடை நிதி மூலம் அமைக்கப்பட் டயுள்ளன புதிய வகுப்பறைக் கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் கல்லூரி அதிபர் எம்.எஸ்.எப்.சிபானா தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக குருநாகல் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி தயாசிறி ஜயசேகர, இலங்கைக்கான குவைத் நாட்டு தூதுவரின் பிரதிநிதி அஷ்-ஷெய்க் எம். பிர்தௌஸ், குவைத் திட்டத்தின் பாடசாலை அபிவிருத்தி மற்றும் அல்-ஹிமா இஸ்லாமிய நிறுவனத்தின் பணிப்பாளர் அஷ்-ஷெய்க் எம்.ஏ.ஏ. நூறுல்லா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் குவைத் தூதுவரின் பிரதிநிதி அஷ்-ஷெய்க் எம். பிர்தௌஷ் உரையாற்றுகையில்,

இலங்கையில் குவைத் தனவந்தர்கள் இதுவரை பௌதீக வளம் குறைந்த 30 பாடசாலைகளுக்கு வகுப்பறைக் கட்டிடங்களை நிர்மாணித்துக் கொடுத்துள்ளனர். அத்துடன் மொரட்டுவை பல்கலைக்கழகத்திலும் மருத்துவ பீடம் ஒன்றை நிறுவுவதற்கு குவைத் உதவியுள்ளது. அத்துடன் தென் கிழக்கு பல்கலைக்கழகத்திலும் ஓர் வைத்திய பீடமொன்றை நிறுவுவதற்காக தென்கிழக்கு பல்கலைக்கழக அதிகாரிகள் குவைத் தூதுவரிடம் பேச்சுவார்த்தைகள் நடத்தி வருகின்றனர்.

குவைத் அரசாங்கம் இலங்கை மக்களின் கல்வி அபிவிருத்திக்கு தொடர்ச்சியாக உதவி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

கல்விக்கு அவர்கள் உதவுவது எதிர்காலத்தில் இலங்கையில் கல்வி மேலும் முன்னேற்றமடைந்து வரும். அத்துடன், இலங்கை மருத்துவர்கள், பொறியியலாளர்கள் மிகக்கூடிய சம்பளத்தினைப் பெற்று கல்வித்துறையில் இலங்கை சிறந்த முன்னேற்ற நாடாக விளங்குவதற்கு குவைத் நன்கொடையாளர்கள் உதவி வருகின்றனர் என்றார்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (11.09.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 201.3324 | 212.1622 |
| கனேடியன் டொலர் | 230.7125 | 242.2267 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 42.4343 | 45.3455 |
| யூரோ | 337.4802 | 353.4145 |
| ஜப்பான் யென் | 2.1483 | 2.2487 |
| சிங்கப்பூர் டொலர் | 230.6845 | 242.0093 |
| ஸ்ரேலிங் பவுன் | 393.9225 | 411.2149 |
| சுவிஸ் பிரான்க் | 351.6991 | 370.8837 |
| ஐ.அ. டொலர் | 316.2925 | 327.6048 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 853.2205 |
| குவைட் | குவைட் தினார் | 1,042.8128 |
| ஓமான் | ஓமான் றியால் | 835.5016 |
| கட்டார் | கட்டார் றியால் | 88.2263 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85.7634 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87.5754 |

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிற்றுக்கிழமை 2023.09.10
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5233
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 25,825,280.00
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கங்கள் 5 9 7 5 5 8

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3475
சீட்டிழுப்பு திகதி 2023.09.10
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 60,503,772.80
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 10 27 56 65
விசேட எழுத்து N
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 27634

லக்கி 7
திகதி 10.09.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0059
வெற்றி இலக்கினம் ரிஷபம்
வெற்றி இலக்கங்கள் 3 5 3 6 0 0
L7 இலக்கம் 1 7
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,781,031.60

தன நிதானய
தேதி 2023/09/10
சீட்டிழுப்பு இலக்கம் 1263
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 109,303,050.40
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 46 58 74 76
விஷேசட ஆங்கில எழுத்து X
Double Chance இலக்கம் 21857

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்
சீட்டிழுப்பு திகதி 2023-09-10
542
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,428,217.20
வெற்றி இலக்கினம் மீனம்
வெற்றி இலக்கங்கள் 08 32 35 52
விசேட இலக்கினம் மீனம்

Mega Power
சீட்டிழுப்பு இலக்கம் 1581
10/09/2023
77521
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 407,235,152.00
ஆங்கில எழுத்து W
சுப்பர் இலக்கம் 06
வெற்றி இலக்கங்கள் 25 37 49 62
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# வடக்கு ஆளுநர் துணிச்சலான பெண்மணி

## அவர் மாற்றப்படக் கூடாதென்கிறார் செல்வம் அடைக்கலநாதன்



வடக்கு ஆளுநர் துணிச்சலான பெண்மணி. அவர் மாற்றப்படக் கூடாது என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் கடந்த சனிக்கிழமை (09) இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின்போது ஊடகவியலாளர் ஒருவர், வடக்கு ஆளுநர் விரைவில் மாற்றப்படுவார் என வடமாகாண முன்னாள் முதலமைச்சரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் உங்கள் நிலைப்பாடு என்ன எனக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாண ஆளுநர் முன்னரும் வடக்கின் ஆளுநராக இருந்தபோது சரியாக செயற்பட்டவர். தற்போதும் அவருடைய செயற்பாடுகள் மிகச் சரியானதாக அமைந்திருக்கின்றன. அவர் மாற்றப்படுகின்ற சூழல் இருக்க முடியாது. ஏனெனில் அவர் ஒரு பெண்மணி. துணிச்சலாக பல விடயங்களை செய்பவர்.

நாங்கள் அவரிடம் சென்று எங்களது கோரிக்கையை முன் வைக்கின்றபோது அவர் தன்னுடைய ஆளுமைக்குட்பட்ட விடயங்களை செய்வதற்கு தயங்கமாட்டார். அந்த வகையில் வந்து சிறிது காலத்தில் மாற்றப்படக் கூடாது. ஏன் அவர் மாற்றப்படுவார் என பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்கினேஸ்வரன் சொன்னாரெனத் தெரியவில்லை. ஆனால், நான் அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை – என்றார்.

# வவுனியாவில் மது போதையில் ஆலயத்துக்கு வந்த குருக்கள்

## பக்தர்களால் எச்சரிக்கப்பட்டு விரட்டியடிப்பு

*வவுனியா நிருபர்*

வவுனியா பிரதேச செயலக இந்து கலாசார உத்தியோகத்தரின் கண்காணிப்பின் கீழ் உள்ள ஆலயம் ஒன்றின் மகோற்சவத்தின்போது குருக்கள் ஒருவர் மது போதையுடன் வருகை தந்ததுடன், சாராயப் போத்தல் மற்றும் மாவா என்பனவும் ஆலய பக்தர்களால் மீட்கப்பட்டு குருக்கள் விரட்டியடிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு (10) இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா பிரதேச செயலக இந்து கலாசார உத்தியோகத்தரின் கண்காணிப்பின் கீழ் உள்ள ஆலயம் ஒன்றின் மகோற்சவம் நடைபெற்று வருகின்றது.

குறித்த மகோற்சவத்துக்கு வருகை தந்த குருக்கள் மது போதையில் ஆலயத்துக்கு சென்று பூஜை செய்ததுடன், அங்குள்ள மக்களுடனும் முரண்பட்டுள்ளார்.

குறித்த குருக்கள் மது போதையில் இருந்துள்ளதுடன், அவரிடம் இருந்து சாராயப் போத்தல் மற்றும் மாவா என்பனவும் ஆலயப் பக்தர்களால் மீட்கப்பட்டுள்ளன. இதனையடுத்து, ஆலய பக்தர்கள் பிறிதொரு குருக்களை அழைத்து, அவரிடம் குறித்த குருக்களை ஒப்படைத்து ஆலயத்திலிருந்து வெளியேற்றியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் ஆலய நிர்வாகத்தினரால் மாவட்ட அந்தணர் ஒன்றியம், மாவட்ட மற்றும் பிரதேச செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் ஆகியோரிடமும் முறைப்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வவுனியாவில் சில குருமார் தொடர்பான பல முறைப்பாடுகள் அண்மைக்காலமாக முன்வைக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# மிருசுவில் தமிழ்த்தாசனின்

## “பண்பாடுகள் படும்பாடுகள்” நூல் வெளியீடு



*சாவகச்சேரி நிருபர்*

மிருசுவில் தமிழ்த்தாசனின் பத்தாவது வெளியீடான “பண்பாடுகள் படும்பாடுகள்” என்ற சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு வைபவம் நேற்று முன்தினம் (10) பிற்பகல் சாவகச்சேரி வடக்கு திருப்புகழ் மண்டபத்தில் இடம்பெற்றது.

சாவகச்சேரி பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவர் செ.மகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் வைத்திய அதிகாரி சி.சுதோக்குமார் கலந்து சிறப்பித்திருந்தார்.

மேலும் சிறப்பு விருந்தினர்களாக வைத்தியர் அருளானந்தம், குகன் ஸ்ரூடியோ அதிபர் வ.ஸ்ரீபிரகாஷ் மற்றும் திருப்புகழ் மண்டப உரிமையாளர் யோ.செந்திமயூரன் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

நிகழ்வின் இறுதியில் சக்கடத்தார் என்ற நகைச்சுவை சிறப்பு நிகழ்ச்சியும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# அல்-அஸ்ஹர் முன்பள்ளி மாணவர்களின் கண்காட்சி

*மன்னார் நகர் நிருபர்*

மன்னார், அல்-அஸ்ஹர் முன்பள்ளி மாணவர்களின் கண்காட்சி நிகழ்வு சனிக்கிழமை(09) காலை உப்புக்குளம் பொது மண்டபத்தில் இடம்பெற்றது.

முன்பள்ளி ஆசிரியர் ஆர்.எம்.பரீதா தலைமையில் இடம்பெற்ற குறித்த கண்காட்சி நிகழ்வில் முன்னாள் மன்னார் நகரசபை உறுப்பினர் என்.நகுசீன், உப்புக்குளம் தெற்கு கிராம அலுவலர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், உப்புக்குளம் பள்ளிவாசல் செயலாளர் உள்ளடங்கலாக முன்பள்ளி சிறார்கள், பெற்றோர் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது முன்பள்ளி சிறார்களால் உருவாக்கப்பட்ட பொருட்கள் கண்காட்சிக்காக வைக்கப்பட்டதோடு, தெரிவுசெய்யப்பட்ட மூவருக்கு பரிசில்கள் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# அரிசி ஆலையில் தீ விபத்து



*பு.கஜிந்தன்*

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்ட, அளவெட்டி வடக்கு பகுதியிலுள்ள அரிசி ஆலையொன்றில் கடந்த சனிக்கிழமை (09) தீ விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது,

கடந்த வெள்ளிக்கிழமை (08) மாலை அரிசி ஆலை வேலைகள் நிறைவடைந்து உரிமையாளரால் பூட்டப்பட்டது. இந்நிலையில் மறுநாள் சனிக்கிழமை காலை 8 மணியளவில் அரிசி ஆலையை திறக்கச் சென்றபோது, அரிசி ஆலை தீப்பற்றி எரிந்து கொண்டிருந்ததை கண்ட உரிமையாளர் அயலவர்களை அழைத்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளார்.

இதன்போது பல இலட்சம் ரூபா பெறுமதியான அரிசி ஆலை இயந்திரங்கள், ஏனைய உபகரணங்கள், தளபாடங்கள் என்பன எரிந்து முற்றாக நாசமாகியுள்ளன.

அரிசி ஆலை உரிமையாளரால் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. மின் ஒழுக்கு காரணமாக இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதா அல்லது தீ வைக்கப்பட்டதா என்ற விபரங்கள் இதுவரை வெளியாகவில்லை. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தெல்லிப்பழை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நோர்வூட் வித்தியாலய மாணவர்கள் ஐவர் மூன்று ‘ஏ’ சித்தி பெற்று பாடசாலைக்கு பெருமை

*எஸ்.கணேசன்*

2022 ஆம் (2023 ஆம்) ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் ஹட்டன் கல்வி வலயத்துக்குட்பட்ட நோர்வூட் தமிழ் வித்தியாலயத்திலிருந்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் ஐவர் மூன்று ‘ஏ’ தர சித்திகளைப் பெற்று பாடசாலைக்கும் சமூகத்துக்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

அதனடிப்படையில் பொறியியல் தொழில்நுட்பப் பிரிவு மாணவன் எஸ்.சினோஷன் மூன்று ‘ஏ’ தர சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலாமிடம் பெற்றுள்ளதுடன், பீ.பிரதீஸ் எனும் மாணவன் 2ஏ, பி பெறுபேறுகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் நான்காமிடத்தை பெற்றுக் கொண்டுள்ளார்.

மேலும் பிரதான கலைப்பிரிவில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் து.கிருபாலினி, பி.லோசன்யா, வீ.தனுக்ஷியா, எஸ்.சபி பிரகரிஸ்தா ஆகிய நான்கு மாணவிகளும் மூன்று ‘ஏ’ தர சித்திகளைப் பெற்றுக் கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் கல்லூரியின் மொத்தப் பெறுபேறுகளின் அடிப்படையில் 40இற்கும் மேற்பட்ட மாணவர்கள் நேரடியாக பல்கலைக்கழகத்துக்குத் தெரிவுசெய்யப்படவுள்ளனர் என்பதை அதிபர் மகிழ்ச்சியுடன் அறியத் தந்ததோடு இதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட உப அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம், பாடசாலை நலன்விரும்பிகள் மற்றும் வலயக்கல்விக் காரியாலயப் பணிப்பாளர் உட்பட அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டார்.

# வெள்ளந்துரை தோட்ட முகாமைத்துவ அடாவடிக்கு ஆனந்தகுமார் கண்டனம்

## விடயத்தை ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுசெல்லவும் நடவடிக்கை

இரத்தினபுரி - கஹவத்தை பெருந்தோட்ட யாக்கத்தின் வெள்ளந்துரை தோட்ட முகாமைத்துவத்தின் அடாவடித்தனம் காரணமாக அங்கு தற்காலிகமாக அமைத்திருந்த வீடு உடைக்கப்பட்டமைக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளரும் ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் மூவர் அடங்கிய குழுவின் உறுப்பினருமான சுப்பையா ஆனந்தகுமார் கண்டனம் வெளியிட்டுள்ளார்.



அத்துடன், ஜனாதிபதியின் ஆலோசகர் ருவான் விஜேவர்தனவின் ஊடாக இந்த விடயத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்கும் கொண்டுசென்றுள்ளார். அதுமட்டுமன்றி, பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரணவின் கவனத்துக்கும் இந்த விடயத்தை கொண்டுசெல்ல நடவடிக்கை எடுத்துள்ளார்.

தோட்ட முகாமைத்துவத்தை வன்மையாகக் கண்டிப்பதாகத் தெரிவித்துள்ள ஆனந்தகுமார், தோட்ட மக்களை தோட்ட நிர்வாகங்கள் தொடர்ச்சியாக சீண்டுவதையும் அவர்கள் மேல் தாக்குதல்களை மேற்கொள்வதையும் உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும் பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்தச் சம்பவத்தால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பத்துக்கு தோட்ட நிர்வாகம் எதுவித தங்குதடையுமின்றி புதிய வீட்டை வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

# காணாமல்போனவர் சடலமாக மீட்பு

*எஸ்.கணேசன்*

நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நானுஓயா, கிளாரண்டன் பகுதியில் வெள்ளிக்கிழமை (08) இரவு முதல் காணாமல் போயிருந்த நபரொருவர் கடந்த சனிக்கிழமை (09) சடலமாக மீட்கப்பட்டுள்ளார். நானுஓயா - கிரிமிட்டிய பகுதியில் உள்ள சிறிய நீரோடையில் இருந்தே இவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நானுஓயா, கிளாரண்டன் கீழ்ப்பிரிவைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையே (வயது 49) இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நானுஓயா, கிரிமிட்டிய நகரப்பகுதிக்கு பொருட்கள் வாங்குவதற்கு செல்வதாகக் கூறிவிட்டு அன்று இரவு வீட்டிலிருந்து சென்றுள்ளார்.

அவர் திரும்பி வராததால் குடும்பத்தாரும் பொது மக்களும் இணைந்து தேடுதல் நடத்தினர். இது தொடர்பில் நானுஓயா பொலிஸார் பல கோணங்களிலும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# இரட்டைக்கொலை சந்தேக நபர் பொலிஸாரால் கைது

*ஏ.ஏ.எம்.பாயிஸ்*

இரத்தினபுரி, கொடமுல்ல பிரதேசத்தில் சுமார் பத்து வருடங்களுக்கு முன் வயோதிப தம்பதியரைக் கொலை செய்த சந்தேகநபர் பத்து வருடங்களின் பின்னர் இரத்தினபுரி பொலிஸ் நிலைய குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இரண்டு சிகரெட்டுகள் வாங்குவது தொடர்பில் மீதிப்பணம் ஒரு ரூபா வழங்குவதில் ஏற்பட்ட தகராறே இக்கொலைக்கு காரணமாக அமைந்துள்ளதாக விசாரணை நடத்திவரும் பொலிஸார் நேற்று முன்தினம் தெரிவித்தனர்.

இரத்தினபுரி, கொடமுல்ல சந்தியில் கடை நடத்தி வந்த ஏ.எல்.ரத்னசிறி பெரேரா (வயது 69) மற்றும் எம்.கமலா அபேசிங்க (62) ஆகியோர் அவர்களது கடையில் வைத்து வெட்டிப் படுகொலை செய்யப்பட்டனர். இதுவரை காலமும் தலைமறைவாகியிருந்த சந்தேக நபரிடமிருந்து இக்கொலை தொடர்பான மேலதிக தகவல்கள் பெறப்பட்டு வருவதாக இரத்தினபுரி பொலிஸார் தெரிவித்தனர்.

# நபரொருவர் வெட்டிப் படுகொலை

*எஸ். கணேசன்*

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுவரெலியா - மீப்பிலிமான பகுதியில் நபரொருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

வத்தளை பகுதியைச் சேர்ந்த 53 வயது மதிக்கத்தக்க எஸ்.சுந்தரலிங்கம் என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், இச்சம்பவத்துடன் தொடர்புடைய கொழும்பு வெள்ளவத்தை பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர் படுகாயமடைந்த நிலையில், நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

காணித் தகராறு காரணமாகவே இக் கொலை இடம்பெற்றுள்ளதாகத் தெரிவித்த பொலிஸார், சந்தேக நபர் தற்போது தப்பிச் சென்றுள்ளதாகவும் அவரைக் கைதுசெய்வதற்கான விசாரணை ஆரம்பமாகியுள்ளதாகவும் தெரிவித்தனர்.

நுவரெலியா மாவட்ட நீதவான் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட பின் சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படுமென நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.





பிரபல சமூக சேவையாளரான லங்கா புத்ர, தேசமான்ய, தேசபந்து வேலுப்பிள்ளை சிதம்பரநாதனின் 80 வருட கால வாழ்க்கைப் பின்னணிகள் மற்றும் அவரது சமூக சேவைகள் பற்றி எழுதப்பட்ட அமுதவிழா சிறப்பு மலர் நேற்று முன்தினம் (10) மாலை கண்டி, விவேகானந்தா கல்லூரி கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. பிரபல சினிமா, தொலைக்காட்சி நகைச்சுவை நடிகர் வில்சன் குணரத்ன, பேராதனைப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்துறைத் தலைவர் பேராசிரியர் துரை மனோகரன், கிரிக்கெட் வீரர் முரளிதரனின் தந்தை சேவா ஜோதி எஸ். முத்தையா, தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தெ. செந்தில் வேலவர், அருட் தந்தை உட்பட பலர் அதிதிகளாகக் கலந்து கொண்டு சிறப்புப் பிரதிகளைப் பெற்றுக்கொண்டனர். மேலும் இதன்போது அதிதிகள் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. **படங்கள்:** ஜே.எம். ஹாபீஸ், ஆர். ஏ. இராமன்







எட்டியாந்தோட்டை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தின் ஏகதள கோபுர கும்பாபிஷேக பெருவிழா நேற்று முன்தினம் (10) சிறப்பாக இடம்பெற்றது.
**படங்கள்:** அவிசாவளை நிருபர்

# 24ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற ஜோகோவிச்



ஆண்டின் இறுதி கிராண்ட்ஸ்லாம் தொடரான யு.எஸ். ஓபன் என வர்ணிக்கப்படும் அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவின் இறுதிப் போட்டியில் ரஷ்யாவின் டேனில் மெட்வெடேவ்வை வீழ்த்தி தனது 24ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றார் செர்பியாவின் நோவாக் ஜோகோவிச்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப்போட்டியில் 6 : 3, 7 : 6, 6 : 3 என்ற செட் கணக்கில் ஜோகோவிச் வெற்றி பெற்றார். தனது 36ஆவது கிராண்ட்ஸ்லாம் இறுதிப் போட்டியில் பங்கேற்ற ஜோகோவிச் அதில் தனது 24ஆவது வெற்றியை பதிவு செய்தார். அதன்படி இது அவரது 24ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டம் ஆகும்.

ஏற்கனவே, ஆடவர் டென்னிஸ் பிரிவில் அதிக கிராண்ட்ஸ்லாம் பட்டம் வைத்துள்ளவர் நோவாக் ஜோகோவிச் தான்.

தற்போது ஆடவர் - மகளிர் இரண்டு பிரிவிலும் அதிக டென்னிஸ் கிராண்ட்ஸ்லாம் பட்டம் வைத்துள்ள மார்கரெட் கோர்ட் (24 பட்டங்கள்) சாதனையை சமன் செய்துள்ளார். மேலும், நான்காவது முறையாக ஒரு ஆண்டில் நடக்கும் நான்கு கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் மூன்று பட்டங்களை வென்றிருக்கிறார் ஜோகோவிச். 2011, 2015, 2021 மற்றும் 2023ஆம் ஆண்டுகளில் ஒரே ஆண்டில் மூன்று கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்று இந்த சாதனையை செய்துள்ளார். இது வேறு எந்த வீரரும் செய்யாத சாதனை ஆகும்.

இந்த ஆண்டு இதற்கு முன்னதாக அவர் பிரெஞ்சு ஓபன் மற்றும் அவுஸ்திரேலிய ஓபன் கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றிருந்தார். ஜோகோவிச் இதுவரை 10 அவுஸ்திரேலிய ஓபன், 7 விம்பிள்டன், 4 யூ.எஸ் ஓபன் மற்றும் 3 பிரெஞ்ச் ஓபன் பட்டங்களை வென்றுள்ளார்.

## விளையாட்டுத் துளிகள்

ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடரில் சுப்பர் 4 சுற்றில் பங்களாதேஷ் அணியுடனான ஆட்டத்தில் இலங்கை அணி 21 ஓட்டங்களால் வெற்றியினைப் பதிவு செய்த நிலையில் 13 வெற்றிகளுடன் ஒருநாள் போட்டிகளில் தொடர்ச்சியாக அதிக வெற்றிகளைப் பதிவு செய்த முதல் ஆசிய அணியாக இலங்கை அணி புதிய வரலாறு படைத்தது.

.........................

மால்டோவா மகளிர் கால்பந்து அணியின் நட்சத்திர வீராங்கனையான 26 வயதுடைய வியோலிடா மிடுல் கடந்த 4ஆம் திகதி தமது சக கால்பந்து வீராங்கனை ஒருவருடன் மலையேறும் பயிற்சியில் ஈடுபட்ட வேளையில் விபத்தில் சிக்கி மரணமடைந்தார்.

.........................

உதட்டு முத்த சர்ச்சையில் சிக்கிய லூயிஸ் ரூபியேல்ஸ் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். அவரது முன்னாள் மனைவி மரியா மானுவெல, மகளின் ஆதரவு கொடுப்பனவுகளை மறுபரிசீலனை செய்யுமாறு முன்பு கேட்டதாக கூறப்பட்டது. லூயிஸ் ரூபியேல்ஸின் ஆண்டு வருமானம் 2011ஆம் ஆண்டு 97,000 யூரோக்களாக இருந்தது. ஆனால் தற்போது 955,000 யூரோக்களாக உயர்ந்துள்ளது. எனவே, லூயிஸ் ரூபியேல்ஸ் தனது ஒவ்வொரு மகள்களுக்கும் (மொத்தம் 3 மகள்கள்) மாதம் தலா 400 யூரோக்களில் இருந்து 800 யூரோக்கள் வரை செலுத்துமாறு வலென்ஸ்சியாவில் உள்ள நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# இரவு உணவு உண்ணவே சூதாட்ட விடுதிக்கு சென்றோம் - பாக். கிரிக்கெட் அதிகாரிகள் விளக்கம்



ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடர் நடைபெற்றுவரும் நிலையில், பாகிஸ்தான் கிரிக்கெட் அதிகாரிகள் இருவர் போட்டிகள் நடைபெற்றுவரும் இலங்கையின் கொழும்பில் உள்ள சூதாட்ட விடுதிக்கு சென்ற வீடியோ வெளியாகியிருக்கிறது. இந்த விவகாரம் பெரும் அதிர்வலைகளை கிளப்பியிருக்கும் நிலையில், அந்த அதிகாரிகள் கொடுத்த விளக்கம் ரசிகர்கள் மற்றும் கிரிக்கெட் விமர்சகர்கள் மத்தியில் மேலும் கோபத்தை கிளப்பியுள்ளது.

தற்போதைய பாகிஸ்தான் அணியின் ஊடக மேலாளர் உமர் பாரூக் கல்சன் பாகிஸ்தான் கிரிக்கெட் அமைப்பின் சர்வதேச கிரிக்கெட் பிரிவு பொது மேலாளர் அட்னன் அலி ஆகிய இருவரும் இலங்கையில் உள்ள சூதாட்ட விடுதிக்கு சென்ற வீடியோ வெளியாகி உள்ளது. அவர்களது தனிப்பட்ட விடயம் என இதை ஒதுக்க முடியாது. காரணம், ஐ.சி.சி. விதிப்படி கிரிக்கெட் வீரர்கள் மற்றும் அணியை சார்ந்த அதிகாரிகள் யாரும் சூதாட்டம் சார்ந்த இடங்களுக்கு செல்லக்கூடாது. ஆனால், அதை மீறி அவர்கள் இருவரும் சென்றுள்ளனர்.

இந்த விவகாரம் ஊடகங்களில் வீடியோ ஆதாரத்துடன் வெளியான நிலையில், அந்த அதிகாரிகள், தாங்கள் இரவு உணவு உண்ணவே அந்த சூதாட்ட விடுதிக்கு சென்றதாக விளக்கமளித்துள்ளனர். கிரிக்கெட் விமர்சகர்கள் பலரும் பாகிஸ்தான் கிரிக்கெட் அமைப்பு அவர்களை உடனடியாக பாகிஸ்தான் அழைத்து பணி நீக்கம் செய்ய வேண்டும். அவர்கள் மீது விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்றும் கூறி வருகின்றனர்.

பாகிஸ்தான் அதிகாரிகள் இப்படி சிக்குவது முதன்முறையல்ல. முன்னதாக 2015ஆம் ஆண்டில் இதேபோன்ற சம்பவம் நடந்துள்ளது. அப்போது பாகிஸ்தான் அணியின் முன்னாள் கேப்டனும் அப்போதைய அணி மேலாளருமான மொய்ன் கான் சூதாட்ட விடுதிக்கு மனைவியுடன் சென்று சிக்கினார். அவரை பாதி தொடரிலேயே அழைத்து பணி நீக்கம் செய்தது பாகிஸ்தான் கிரிக்கெட் என்பது குறிப்பிடத்தக்கது.

# உலகக் கிண்ணத் தொடருக்கான நியூசிலாந்து குழாம் வெளியானது



இந்தியாவில் அடுத்த மாதம் நடைபெறும் ஐ.சி.சி. உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் பங்கெடுக்கும் கேன் வில்லியம்சன் தலைமையிலான 15 பேர் அடங்கிய நியூசிலாந்து குழாம் நேற்று வெளியானது.

கேன் வில்லியம்சன் தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ள நியூசிலாந்து குழாத்தில் வேகப்பந்துவீச்சாளர்களான கைல் ஜேமிசன், அடம் மில்னே ஆகியோருக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ள நிலையில், நியூசிலாந்து கிரிக்கெட் சபையின் வீரர் ஒப்பந்தத்துக்குள் அடங்காத வீரர்களான ட்ரென்ட் போல்ட் மற்றும் ஜேம்ஸ் நீஷம் ஆகியோருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கின்றது.

உபாதைக்குள்ளான சுழல்பந்து சகலதுறைவீரர் மைக்கல் பிரஸ்வெல் உலகக் கிண்ணத்தில் ஆடும் வாய்ப்பினை இழக்கின்றார். இதேநேரம் உலகக் கிண்ண குழாத்தில் உள்வாங்கப்பட்டிருக்கும் கேன் வில்லியம்சன் உபாதை ஒன்றிலிருந்து தேறி வரும் நிலையில் கேன் வில்லியம்சனுக்குப் பதிலாக டொம் லேதம் நியூசிலாந்து குழாத்தினை வழிநடத்துவார் என எதிர்பார்க்கப்பட்டிருக்கின்றது.

நியூசிலாந்து அணி உலகக் கிண்ணத் தொடரில் தமது முதல் போட்டியில் உலகக் கிண்ண நடப்புச் சம்பியன்களாக காணப்படும் இங்கிலாந்து அணியை ஒக்டோபர் 05ஆம் திகதி அஹமதாபாத் மைதானத்தில் வைத்து எதிர்கொள்கின்றது.

**நியூசிலாந்து குழாம்**

கேன் வில்லியம்சன் (தலைவர்), டொம் லேதம் (உப தலைவர்), ட்ரென்ட் போல்ட், மார்க் சப்மன், டெவோன் கொன்வெய், லோக்கி பெர்குஸன், மேட் ஹென்ரி, டேரைல் மிச்சல், ஜிம்மி நீஷம், கிளன் பிலிப்ஸ், ரச்சின் ரவீந்திரா, மிச்சல் சான்ட்னர், இஸ் சோதி, டிம் சௌத்தி, வில் யங்

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# முத்தத்தால் பதவியை இராஜினாமா செய்த ரூபியேல்ஸ்



பீபா மகளிர் உலகக்கிண்ண உதைபந்து தொடரின் இறுதிப் போட்டியில் மைதானத்தில் வெற்றி கொண்டாட்டத்தின் போது ஸ்பெயின் வீராங்கனைகளை அந்நாட்டு கால்பந்து சம்மேளனத் தலைவர் லூயிஸ் ரூபியேல்ஸ் கட்டியணைத்து முத்தமிட்டு வாழ்த்து தெரிவித்தார். இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலானது. லூயிஸ் ரூபியேல்சின் இந்த செயலுக்கு கண்டனங்கள் குவிந்தன.

இதையடுத்து, அவர் மன்னிப்பு கேட்டார். மேலும், கால்பந்து சம்மேளனத் தலைவர் லூயிஸ் ரூபியேல்ஸ் பதவி விலகும் வரை விளையாட மாட்டோம் என மகளிர் அணி தெரிவித்திருந்தது.

இந்த சம்பவம் தொடர்ந்து சர்ச்சையை ஏற்படுத்தியதையடுத்து, ஸ்பெயின் கால்பந்து சம்மேளனத் தலைவர் லூயிஸ் ரூபியேல்ஸ்-க்கு 90 நாட்களுக்கு தடை விதித்து சர்வதேச கால்பந்து சம்மேளனம் உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், அவர் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

# பாலமுனை அல்-அக்ஸா இளைஞர் கழக அணி மாவட்டப் போட்டிக்கு தெரிவு



அட்டாளைச்சேனை மேலதிக நிருபர்

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் ஏற்பாட்டில் அட்டாளைச்சேனை பிரதேச செயலக இளைஞர் கழகங்களுக்கிடையில் நடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் பாலமுனை அல்-அக்ஸா இளைஞர் கழக அணி வெற்றி பெற்று அம்பாறை மாவட்டப் போட்டிக்கு தெரிவானது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலக இளைஞர் சேவை அதிகாரி பீ.எம்.றியாத் தலைமையில் இலங்கை தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் ஒலுவில் மைதானத்தில் அண்மையில் இறுதிப் போட்டி நடைபெற்றது. இறுதிப் போட்டியில் அட்டாளைச்சேனை அஷ்ரப் இளைஞர் கழக அணியை 2 - 1 என்ற கோல்கள் அடிப்படையில் அல் - அக்ஸா அணியினர் வெற்றிபெற்று 2023ஆம் வருடத்துக்கான அட்டாளைச்சேனை பிரதேச இளைஞர் கழக சம்பியனாக தெரிவாகி அம்பாறை மாவட்டப் போட்டிக்கு தகுதிபெற்றமை குறிப்பிடத்தக்கது.




# வாழைச்சேனை அந்-நூரியன்ஸ் கிண்ணம் 2013 அணி வசம்




மீராவோடை, கல்குடா நிருபர்கள்

வாழைச்சேனை அந்-நூர் தேசிய பாடசாலை பழைய மாணவர் அமைப்பினர் நடத்திய அந்-நூரியன்ஸ் கிரிக்கெட் சுற்றுத்தொடரை 2013 க.பொ.த. பழைய மாணவர் அணி கைப்பற்றியது.

28 அணிகள் பங்குபற்றிய குறித்த சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டி அண்மையில் அந்-நூர் தேசிய பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. ஆறு ஓவர்கள் கொண்ட தொடரின் இறுதிப் போட்டியில் 2013ஆம் ஆண்டு, 2017ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தர மாணவர்கள் அணியினர் மோதிக் கொண்டனர். பாடசாலை அதிபர் ஏ.எம்.தாஹிர் தலைமையில் நடைபெற்ற வெற்றிக் கிண்ணம் வழங்கும் நிகழ்வில், அதிதிகளாக கிழக்கு மாகாண விளையாட்டுப் பணிப்பாளர் என்.எம்.நௌபீஸ், தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.சீ.ஏ.நாஸர், சட்டத்தரணி எம்.எஸ்.ஏ.நவாஸ், மட்டக்களப்பு மத்தி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளரும் கோறளைப்பற்று மேற்கு கோட்டக் கல்விப் பணிப்பாளருமான வீ.ரீ.அஜ்மீர், வாழைச்சேனை பள்ளிவாசல்கள் சம்மேளனத் தலைவர் எம்.ஐ.எஸ்.முஹம்மட், டைம் ரெவல்ஸ் உரிமையாளர் ஐ.எம்.றிகாஸ், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் எம்.எஸ்.எம்.அன்வர் உட்பட பிரதேச முக்கியஸ்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# மஞ்சள் அட்டை காட்டிய நடுவருக்கு அதிர்ச்சி கொடுத்த வீரர்



நிதி திரட்டுவதற்காக நடத்தப்பட்ட கால்பந்து போட்டியில் மஞ்சள் அட்டை காட்டிய நடுவரிடம், யூனோ ரிவர்ஸ்டு அட்டையை வீரர் ஒருவர் நீட்டிய தருணம் சிரிப்பை ஏற்படுத்தியது.

லண்டனில் சைட்மேன் தொண்டு கால்பந்து போட்டி நடந்தது. இதில் சைட்மேன் எவ்.சி அணி 8-5 என்ற கோல் கணக்கில் யூடியூப் ஓல்ஸ்டார்ஸ் அணியை வீழ்த்தியது.

இந்தப் போட்டியின் ஒரு கட்டத்தில் யூடியூப் ஓல்ஸ்டார்ஸ் அணி வீரர் மேக்ஸ் போஷ் தவறிழைத்ததற்காக, கள நடுவரான மார்க் கிளாடென்பார்க் மஞ்சள் அட்டை கொடுத்தார். உடனே மேக்ஸ் போஷ் யுனோ ரிவர்ஸ்ட் அட்டையை நடுவரிடம் காட்ட அவர் ஒரு கணம் திகைத்து போனார்.

ஏனெனில், யுனோ ரிவர்ஸ்ட் என்பது ஒன்லைனில் விளையாடப்படும் கார்டு விளையாட்டின் திசை தலைகீழாக மாறுவதை காட்டுவதாகும். யூடியூபரான மேக்ஸ் போஷின் இந்த செயல் மைதானத்தில் நகைப்பை ஏற்படுத்தியது. இதுதொடர்பான வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது. இந்தப் போட்டியின் மூலம் பல தொண்டு நிறுவனங்களுக்காக 2.4 மில்லியன் பவுண்டுகளுக்கும் அதிகமாக திரட்டப்பட்டது.



**இலங்கை வலைப்பயிற்சி பந்துவீச்சாளர் சந்திரமோகன் கிரிஷாநாத், இந்திய கிரிக்கெட் வீரர் விராட் கோஹ்லிக்கு வெள்ளியிலான பேட் ஒன்றை பரிசாக அளித்தார். இதுதொடர்பாக அவர் கூறுகையில், நான் விராட் கோஹ்லியின் தீவிர ரசிகன். அவரது ஒவ்வொரு சதத்தின் விவரங்களையும் இந்த வெள்ளி பேட்டில் பொறித்துள்ளேன் என தெரிவித்தார்.**

## உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவம்

# முஸ்லிம் கட்சிகள் ஒன்றிணைந்து சர்வதேச விசாரணையை வலியுறுத்த வேண்டும்

## கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் சுபைர்

*மட்டக்களப்பு,பொத்துவில் செய்தியாளர்கள்*







உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவம் தொடர்பில் சர்வதேச விசாரணையை வலியுறுத்தி நாடு பூராகவும் நடைபயணம் ஒன்றினை மேற்கொள்வதற்கு முஸ்லிம் அரசியல் கட்சிகள் முன்வர வேண்டும் என கிழக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைர் தெரிவித்தார்.

ஏறாவூர் பிரதேச இமாம்கள், முஅத்தீன்கள் மற்றும் ஆலிம்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் (10) ஏறாவூர் முஹைதீன் ஜும்ஆப் பள்ளிவாசலில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கௌரவ அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலின் உண்மை நிலையை கண்டறியும் பொருட்டு, முஸ்லிம் அரசியல் கட்சிகள் அரசியல் வேற்றுமைகளை களைந்து ஒன்றுபட்டு செயற்பட வேண்டும். அதற்காக நாடு பூராகவும் நடைபயணத்தை மேற்கொண்டு சர்வதேச விசாரணை ஒன்றினை கோர வேண்டும்.

முஸ்லிம் சமூகம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்த நாட்டை காட்டிக்கொடுத்த வரலாறு கிடையாது. ஏனைய சமூகங்களுடன் ஐக்கியமாகவும் ஒற்றுமையாகவும் வாழ்ந்து முன்னுதாரணமாக செயற்பட்ட சமூகம். இலங்கை திருநாட்டிலே கௌரவமாக தலைநிமிர்ந்து வாழ்ந்த முஸ்லிம் சமூகம் உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவத்தின் பின்னர் தலைகுனிந்து வாழவேண்டியதொரு துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளானது.

முஸ்லிம் சமூகத்தோடு மிகவும் நெருக்கமாகவும் விசுவாசமாகவும் இருந்தவர்கள் கூட குறித்த தாக்குதலின் பின்னர் முஸ்லிம்களை தீவிரவாதிகள், பயங்கரவாதிகள் போன்று சந்தேகக்கண்கொண்டு பார்க்கத் தொடங்கினர். நாட்டிலே இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் சீர்குலைந்து காணப்பட்டது.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலுடன் யார் தொடர்புபட்டார்கள், எவ்வாறு செய்தார்கள், எதற்காக செய்தார்கள் என்கின்ற விடயங்கள் எல்லாம் சனல்- 4 வெளிட்ட காணொளி ஊடாக வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. இது சாதாரண விடயமல்ல. இன்று பேசுபொருளாக மாறியிருக்கின்ற குறித்த சதித்திட்டத்தின் உண்மை நிலைமையை உலகறியச் செய்வதற்கு சகல தரப்பினரும் ஒன்றுபட்டு செயல்படுவது காலத்தின் தேவையாகும் எனவும் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.சுபைரின் வேண்டுகோளின் பேரில் அஸீஸா பவுண்டேஷன் ஏறாவூர் பிரதேசத்தில் உள்ள இமாம்கள், முஅத்தீன்கள் மற்றும் ஆலிம்கள் என சுமார் 220பேருக்கு இந்நிகழ்வின் போது உலருணவுப் பொதிகளை வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் அஸீஸா பவுண்டேஷன் பணிப்பாளர் சாதிக் ஹசன், சட்டத்தரணி ஏ.எல்.நியாஸ், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஏ.பி.கபூர்தீன், சமூக செயற்பாட்டாளர் றிஸான், உப பொலிஸ் பரிசோதகர் சரூக், ஜம்இய்யதுல் உலமா சபை ஏறாவூர் கிளை தலைவர் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள், உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.



சந்திவெளி திகிலியூர் ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயத்தின் இராஜகோபுர மகா கும்பாபிஷேகம் நேற்றுமுன்தினம் (10) நடைபெற்றது. **படம்:** *வாழைச்சேனை மேலதிக நிருபர்*

# சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைக்கு எதிராக சிறிமாபுர மீனவர்கள் போராட்டம்







*அப்துல்சலாம் யாசீம்*

சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைக்கு எதிராக திருகோணமலை சிறிமாபுர மீனவர்கள் நேற்று (11) வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இப்போராட்டம் திருகோணமலை - நிலாவெளி பிரதான வீதி ஜமாலியா பகுதியில் இடம்பெற்றது.

திருகோணமலை கடற்பரப்பில் தடைசெய்யப்பட்ட சுருக்கு வலை மற்றும் டிஸ்கோ வலைகளை பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனை தடை செய்யுமாறு கோரியே சிறிமாபுர மீனவர்கள் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திருகோணமலை, ஜமாலியா மற்றும் சமுத்ராகம பகுதி மீனவர்கள் தடைசெய்யப்பட்ட மீன்பிடி வலைகளை பயன்படுத்தி வருவதாகவும் இதனால் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் தெரிவித்தனர்.

போராட்ட இடத்துக்கு வருகைதந்த திருகோணமலை தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி மீனவர்களுடன் கலந்துரையாடியதையடுத்து போராட்டம் கைவிடப்பட்டது.

# வாழ்வாதார உதவித் திட்டம்: சாய்ந்தமருதில் ஆடுகள் கையளிப்பு



*மாளிகைக்காடு செய்தியாளர்*

விவசாய அமைச்சினால் முன்னெடுக்கப்படும் வாழ்வாதார உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட சாய்ந்தமருது பிரதேச செயலகத்துக்குட்பட்ட பயனாளிகளுக்கு ஆடுகள் வழங்கும் நிகழ்வு சாய்ந்தமருது கால்நடை வைத்திய அதிகாரி காரியாலயத்தில் நேற்று (11) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு ஆடுகளை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது கால்நடை வைத்திய அதிகாரி, பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் கே.எல்.ஏ.ஹமீட், கணக்காளர் ஏ.ஜே.நுஸ்ரத் பானு, கிராம சேவை நிர்வாக உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.நளீர், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சாய்ந்தமருது அரச கால்நடை வைத்திய அதிகாரி காரியாலய உத்தியோகத்தர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

# நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலை வரலாற்றுச் சாதனை

*பொலிவேரியன் செய்தியாளர்*

நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலை மாணவர்கள் உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளனர். இம்முறை அல்-அஷ்ரக் தேசிய பாடசாலையில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுள் 80 மாணவர்கள் கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம் மற்றும் கலை ஆகிய துறைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக்கழகத்துக்கு தகுதி பெற்றுள்ளதாக அதிபர் தெரிவித்துள்ளார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com



மாகாண மட்ட சமூக விஞ்ஞானப் போட்டியில் பங்குபற்றி தேசிய மட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்ட ஒலுவில் அல்-ஹம்றா மகா வித்தியாலய மாணவி ஏ.எப்.இஸ்ராவை பாராட்டி சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று (11) அதிபர் அஷ்-ஷெய்க் யூ.கே.அப்துல் ரஹீம் தலைமையில் பாடசாலையில் இடம்பெற்றது.

**படம்:** *அட்டப்பள்ளம் செய்தியாளர்*

# கிரிக்கெட் சுற்றுப் போட்டி சோபர் அணி சம்பியன்



*றியாஸ் இஸ்மாயில்*

திருக்கோவில் குட்நிக் விளையாட்டுக் கழகம் நடத்திய கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அட்டாளைச்சேனை சோபர் அணி வெற்றி பெற்று சம்பியனாகியது.

குட்நிக் விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் மாலை (10) இறுதி போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெற்றது.

இச்சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அட்டாளைச்சேனை சோபர் விளையாட்டுக் கழக அணியினர் 10 ஓவர்கள் நிறைவில் 09 விக்கெட் இழப்புக்கு 101 ஓட்டங்களை பெற்றனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பொத்துவில் பவர் போய்ஸ் விளையாட்டுக் கழக அணியினர் 10 ஓவர்கள் நிறைவில் 06 விக்கெட் இழப்புக்கு 60 ஓட்டங்களைப் பெற்று 41 ஓட்டங்களால் தோல்வியடைந்தனர்.

வெற்றி பெற்ற சோபர் அணிக்கு வெற்றி கிண்ணத்துடன் ஒரு இலட்சம் ரூபா பணப்பரிசும் இரண்டாமிடம் பெற்ற பவர் போய்ஸ் அணிக்கு கிண்ணத்துடன் 50ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

இச்சுற்றுத் தொடரில் தொடர் ஆட்ட நாயகனாக சோபர் அணியின் றப்சான் தெரிவு செய்யப்பட்டதுடன் இறுதிப் போட்டியின் ஆட்டநாயகனாக ஜெசீலும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# விரக்தி மனப்பாங்குகளை வளர்த்து தகாத முடிவுகளுக்கு செல்லக்கூடாது

## கலாநிதி கோபாலரெத்தினம் தெரிவிப்பு





*தென்கிழக்கு செய்தியாளர்*

இளைஞர்கள் தமது ஆற்றல், ஆளுமை சக்தியுடன் செயற்பட்டால் சாதிக்க முடியாதது எதுவுமில்லை. விரக்தி மனப்பாங்குகளை வளர்த்து வெறுப்பான எண்ண அலைகள், சிந்தனைகளுக்குட்பட்டு, தகாத முடிவுகளுக்கு செல்லக்கூடாது என கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் கலாநிதி லயன் எம்.கோபாலரெத்தினம் கூறினார்.

உலகதற்கொலை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு கல்முனை நகர லயன்ஸ் கழகம் நடத்திய விழிப்புணர்வுக் கருத்தரங்கில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"நாளைய தொடுவானத்துக்கு வழி செலுத்துதல்" எனும் தலைப்பில் எதிர்காலத் தலைவர்களான இன்றைய இளைஞர், யுவதிகளை அறிவூட்டல் மற்றும் வலுவூட்டல்மூலம் சவால்களை முறியடிப்பதற்கு தயார்படுத்தும் நோக்குடன் இந்தக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கல்முனை நகர லயன்ஸ் கழகத் தலைவர் பொறியியலாளர் எம்.சுதர்சன் தலைமையில், காரைதீவு கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற இக்கருத்தரங்கில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

தொழில்முனைவோர் மற்றும் உயர்கல்விக்காகக் காத்திருக்கும் இளைஞர், யுவதிகளுக்குப் பெரும்பயனாக பயனளிக்கத்தக்கதாகவும் இன்றைய காலகட்டத்துக்குப் பொருத்தமான சிறந்த தலைப்புகளில் இந்த கருத்தரங்கை கல்முனை நகர லயன்ஸ் கழகம் ஏற்பாடு செய்தமை பாராட்டத்தக்கதாகும்.

எனினும், சேவை மனப்பாங்குடன் இலவசமாக ஏற்பாடு செய்யப்படும் பயனுள்ள இத்தகைய கருத்தரங்குகளில் பங்குகொண்டு பயன்பெறுவதில் இன்றைய இளைஞர்களிடையே ஆர்வமின்மை காணப்படுவது வருந்தத்தக்கதாகும்.

குறிப்பாக நமது கிராமப்புறங்கள் சார்ந்த இளைஞர், யுவதிகள் வறுமையைக் காரணம் காட்டி எதிலும் ஆர்வமற்று சோர்வு நிலைக்கு உட்படுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

இத்தகைய இளையோரிடம் காணப்படும் ஆற்றல்கள், ஆளுமைகள், திறமைகள் பெரிதும் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

விடாமுயற்சியும் கடின உழைப்பும் ஆற்றலும் கொண்ட இளையோரால் சாதிக்க முடியாதது எதுவுமில்லை.

குறிப்பாக இளைஞர்கள் இன்றைய இக்கட்டான கால கட்டத்தில் அரச தொழிலை மட்டும் நம்பியிராது, சுய முயற்சியுடன் நிலையான தொழில்களில் ஈடுபட்டு, எதிர்காலத்தில் தொழிலதிபர்களாகமிளிரவும் முனையவேண்டும்.

நம்முன் பலர் இன்று நல்ல வருமானம் பெறும் தொழில் முயற்சியாளர்களாகத் திகழ்வதை முன்னுதாரணமாகக் கொள்ள வேண்டும்.

வீண்விரக்தியுடனும் மனக்கிலேசங்களுடனும் நமது வாழ்க்கைப் பாதையை திசை திருப்பிவிடக்கூடாது என்றார்.

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக நூலகர் (பதில்) கலாநிதி துரையப்பா பிரதீபன், பதிவாளர் ஹிப்பதுல் கரீம், கனவு மெய்ப்படுகிறது அமைப்பின் தலைவரும் மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான நளினி டெட்ணராஜா, திறந்த பல்கலைக்கழக முன்னாள் உதவிப் பணிப்பாளர் சரண்யா லவப்பிரதன் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர்.

இதன்போது சாதனையாளர்களும் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். மேலும், கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் விசாரணைகளை பகிரங்கப்படுத்தக்கோரி மட்டக்களப்பில் பேரணி





*மட்டக்களப்பு நிருபர்*

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத்தாக்குதல் விசாரணைகளை பகிரங்கப்படுத்தக்கோரி மட்டக்களப்பில் கண்டனப் பேரணியொன்று நேற்றுமுன்தினம்(10) இடம்பெற்றது.

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியால் "குண்டுத்தாக்குதலை திசைதிருப்பாதே உண்மையை உலகறியச்செய்" எனும் தொனிப்பொருளில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கண்டனப் பேரணியானது மேற்படி கட்சியின் தலைமைக் காரியாலயத்திலிருந்து ஆரம்பமாகி கல்லடி பாலம் வரை சென்றது.

முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளருமான பூ.பிரசாந்தன் தலைமையில் இடம்பெற்ற இப்பேரணியில்,

''திசை திருப்பாதே திசை திருப்பாதே குண்டுத் தாக்குதலை திசை திருப்பாதே, உண்மையை உலகறியச் செய், குறி வைக்காதே குறி வைக்காதே பிள்ளையானை குறி வைக்காதே, தப்பிக்க வைக்காதே தப்பிக்க வைக்காதே உண்மையான குற்றவாளிகளை தப்பிக்க வைக்காதே, துரோகங்கள் எமக்கு புதிதல்ல, சனல்- 4 ஆதாரமற்ற குற்றச்சாட்டை சுமத்தாதே, நீதி வேண்டும் நீதி வேண்டும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வேண்டும்'' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்திச் சென்றதோடு கோஷங்களையும் எழுப்பினர்.

இப்பேரணியில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் உயர்மட்ட உறுப்பினர்கள், கட்சி ஆதரவாளர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# வடகிழக்கில் இடம்பெற்ற அநியாயங்களுக்கு நியாயம் கிடைக்க ஆவன செய்ய வேண்டும்

## பாராளுமன்ற உறுப்பினர் கருணாகரம் தெரிவிப்பு

கனகராசா சரவணன்

உயிர்த்த ஞாயிறு தின குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்தி சூத்திரதாரிகளுக்கு தண்டனை வழங்குவதுடன் வடகிழக்கில் இடம்பெற்ற அநியாயங்களுக்கும் நியாயம் கிடைக்க ஆவன செய்ய வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் கோ. கருணாகரம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வாவிக்கரையிலுள்ள பாராளுமன்ற உறுப்பினரது காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை (10) இடம்பெற்ற ஊடக மாநாட்டின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உயிர்த்த ஞாயிறு தின குண்டுத்தாக்குதலுடன் சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பாக சனல் 4 காணொளி வெளியிட்டுள்ளது.

இச்சம்பவமானது இலங்கையில் பலரது உண்மை முகத்தை மக்களுக்கு தெரியப்படுத்தியுள்ளது. அந்தவகையில், குறித்த குண்டுத் தாக்குதல்களின் சூத்திரதாரிகள் யார் என்பதை மக்கள் உணர்ந்திருக்கின்றனர். மேற்படி சம்பவத்தில் மட்டக்களப்பில் 31 பேர் உட்பட 250க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.



இந்த உண்மைகளை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளராக கடந்த காலங்களில் செயற்பட்டுவந்த ஆசாத் மௌலானா வெளிப்படுத்தியுள்ளார். இந்நிலையில், மேற் குறித்த சம்பவத்துக்கு நியாயம் கோரி சர்வதேச விசாரணை வேண்டும் என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, சரத் பொன்சேகா, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

உள்நாட்டு விசாரணையில் இவர்களுக்கு எந்த விதமான நம்பிக்கையும் இல்லை என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது.

இந்நிலையில், தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியினர் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டுமென கோஷம் எழுப்பி ஆர்ப்பாட்டமொன்றையும் முன்னெடுத்துள்ளனர்.

ஆசாத் மௌலானா, கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக கொண்டுவருவதற்காக த.ம.வி. புலிகள் கட்சித் தலைவர் அதன் உறுப்பினர்களையும் ஈடுபடுத்தியதாக குற்றஞ்சாட்டியுள்ளார். எனவே, அவர்களுடன் இருந்து செயற்பட்ட மௌலானா கூட ஒரு குற்றவாளியாகக் கருதப்படுவார்.

சர்வதேச விசாரணை என்று கேட்பவர்கள் அரசியல் ரீதியாக தங்களை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்கும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெல்வதற்காகவும் அரசியல் சித்து விளையாடாமல் குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்தி சூத்திரதாரிகளுக்கு தண்டனை வழங்குவதுடன் வடகிழக்கில் இடம்பெற்ற அநியாயங்களுக்கும் நியாயம் கிடைக்க ஆவன செய்ய வேண்டும் என்றார்.

# கிழக்கு மாகாண பிரதி பிரதம செயலாளராக நஸீர் கடமையேற்பு



மீனோடைக்கட்டு செய்தியாளர்

கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளராக (நிர்வாகம்) எம்.எம்.நஸீர் தமது கடமைகளை நேற்று (11) பொறுப்பேற்றுக்கொண்டார்.

இவருக்கான நியமனக் கடிதத்தை பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்க வழங்கி வைத்தார். இந்நிகழ்வில் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஏ.மன்சூர், விவசாய அமைச்சின் செயலாளர் ஐ.கே.ஜீ.முத்துபண்டா, முதலமைச்சின் செயலாளர் என்.மதிவண்ணன், ஆளணி மற்றும் பயிற்சி பிரதிப் பிரதம செயலாளர் (திருமதி) ஆர்.யூ.ஜலீல், சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன், கல்வியமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜீ.திஸாநாயக்க உள்ளிட்ட பல உயரதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# பாண்டிருப்பு திரௌபதை அம்மன் தீப்பள்ளயம் உற்சவம் ஆரம்பம்

செ.துஷியந்தன்

பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பூர்வாங்க கிரியைகள், ஊர்க்காவல் பண்ணல், கடலில் குளித்தல், கொடியேற்றம் ஆகியவற்றுடன் ஆரம்பமாகின்றது.

மகாபாரத போரை நினைவு கூரும் முகமாக தொடர்ந்து 18 நாட்கள் நடைபெறும் உற்சவத்தில் முக்கிய நிகழ்வுகளாக எதிர்வரும் 14 ஆம் திகதி மூன்றாம் நாள் மகாபாரத இதிகாச ஏடு திறத்தல், 18 ஆம் திகதி ஏழாம் நாள் ஸ்ரீகிருஷ்ணர் துவாரகாபுரியிலிருந்து அத்தினாபுரத்துக்கு செல்லும் சுவாமி எழுந்தருளப்பண்ணல், 19 ஆம் திகதி எட்டாம் நாள் அதிகாலை நாட்கால் வெட்டுதல், பன்னிரெண்டாம் நாள் 23 ஆம் திகதி கலியாணக்கால் வெட்டுதல், பதினாறாம் நாள் 27 ஆம் திகதி கிருஷ்ணர், பாண்டவர்கள், திரௌபதை தேவாதிகள் சகிதம் வனவாசம் செல்லுதல், பதினேழாம் நாள் 28 ஆம் திகதி அருச்சுணன் பாசுபதம் பெறுவதற்காக தவநிலை செல்லுதல், அரவாணைகளப்பலி கொடுத்தல், பதினெட்டாம் நாள் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை தீப்பள்ளயத்தின் சிகரம் என போற்றப்படும் தீமிதிப்பு வைபவம் இடம்பெறவுள்ளது. மறுநாள் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை பாற்பள்ளயம், தருமருக்கு முடிசூட்டுதல் தீக்குழிப்பு பால்வார்க்கும் நிகழ்வு இடம்பெற்று அன்று இரவு 7 மணிக்கு இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் திரௌபதை அம்மன் ஆலயத்தில் இருந்து ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்துக்கு அம்மன் முத்துச் சப்பறத்தில் எழுந்தருளி ஊர்வலம செல்லும் நிகழ்வுடன் உற்சவம் இனிதே நிறைவு பெறவுள்ளது.

இலங்கையிலே முதன் முதலில் திரௌபதை அம்மனுக்கென ஆலயம் அமையப்பெற்றது பாண்டிருப்பிலேயாகும். இவ்வாலயத்தின் வரலாறு மிகத் தொன்மையானதாகும். வட இந்தியாவில் இருந்து வைஷ்ணவ மதத்தைப் பரப்பும் நோக்கோடும் மகாபாரத இதிகாசத்தை மக்கள் மத்தியில் நடித்துக்காண்பிக்கும் நோக்கோடும் தாதன் என்னும் மாமுனியும் அவனது ஆட்களும் கடல்வழியே பிரயாணம் செய்து மட்டக்களப்பு பகுதியை வந்தடைந்தனர். பின்னர் அங்கிருந்து அந்நாளில் நாகர் முனை என அழைக்கப்பட்ட திருக்கோயிலைச் சென்றடைந்து அங்கேயே தங்கியிருந்து மகாபாரத இதிகாசக் கதையை மக்கள் மத்தியில் போதித்துவந்தனர்.

வட இந்தியாவில் இருந்து தாதன் என்பவன் இங்கு வந்திருப்பதை ஒற்றன் மூலம் அறிந்து கொண்ட அப்போது மட்டக்களப்பு பகுதிக்கு சிற்றரசனாக இருந்த மாருதசேனனுடைய புத்திரன் எதிர்மன்னசிங்கன் (கி.பி.1539-கி.பி.1583) தாதனைக்கண்டு அவனது வருகை, குலம், நோக்கம், கோத்திரம், நாடு என்பவற்றை விசாரித்திருந்தான். தாதனும் தான் வருகை தந்த நோக்கத்தை மன்னனிடம் தெரிவித்து அதற்கேற்ற உகந்த இடம் ஒன்றைத் தேடி வழங்குமாறு மன்னனிடம் கேட்டுக்கொண்டான். மன்னனும் தன் விருப்பப்படியே கடல் வழியே பிரயாணம் மேற்கொண்டபோது அருகே கடலும், ஆலவிருட்சங்களும், கொக்கட்டி மரங்களும் மேற்கே வனப்பகுதியும் காணப்பட்ட பாண்டிருப்பைக் கண்டு அங்கேயே தாம் கையோடு கொண்டுவந்திருந்த திரௌபதை, விஷ்ணு, பாண்டவர்கள் சிலைகளை வைத்து வழிபாடு நடத்தி வணங்கிவந்தான். மன்னனும் தாதனின் வழிபாட்டு முறைக்கு பூரண ஆதரவைத் தெரிவித்தான்.

பழமையும் புதுமையும் அற்புதமும் நிறைந்த ஆலயமாக பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலயம் திகழ்கிறது.

# பாலமுனை மின்ஹாஜ் பாடசாலை மாணவர்களுக்கு மேலங்கி வழங்கல்



தீகவாபி , திகாமடுல்ல நிருபர்கள்

மாகாண மட்ட மெய்வல்லுனர் போட்டி எதிர் வரும் 18ஆம் திகதி திருகோணமலையில் இடம் பெறவுள்ளது. இந்நிலையில் இப்போட்டிக்கு தெரிவு செய்யப்பட்ட பாலமுனை மின்ஹாஜ் தேசிய பாட சாலை மாணவர்கள் விடுத்த கோரிக்கைக்கிணங்க பாலமுனை பிரதேசத்தைச் சேர்ந்த சமூக ஆர்வலரும் தனவந்தருமான அறபாத் மற்றும் அவருடைய பாரியார் நஸ்மிலா ஆசிரியை ஆகியோர் இணைந்து குறித்த மாணவர்களுக்கு மேலங்கிகளை அன்பளிப்பாக வழங்கினர். இது தொடர்பான நிகழ்வு நேற்று (11) பாடசாலை அதிபர் கே.எல்.உபைத்துல்லா தலைமையில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் உடற்கல்வி பாட ஆசிரியர் ஐ.எல்.எம். பாயிஸ் மற்றும் பயிற்றுவிப்பாளர் உட்பட பாடசாலை ஆசிரியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# சாய்ந்தமருதில் மகாகவி பாரதியார் நினைவு தினமும் பரிசளிப்பு நிகழ்வும்







மாளிகைக்காடு செய்தியாளர்

சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையம் மற்றும் சாய்ந்தமருது எம்.எஸ். காரியப்பர் வித்தியாலயம் என்பன இணைந்து நடத்திய "மகாகவி பாரதியார் நினைவு தினமும் பரிசளிப்பு நிகழ்வும்'' எம்.எஸ். காரியப்பர் வித்தியாலய அதிபர் எம்.எஸ்.எம். ஆரிஃப் தலைமையில் சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் நேற்று (11) இடம்பெற்றன.

இந்நிகழ்வில் கல்முனை சாஹிரா தேசிய கல்லூரி முன்னாள் அதிபரும் சட்டத்தரணியுமான எம்.சி. ஆதம்பாவா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தினார். மகாகவி பாரதியார் நினைவு தின பிரதான உரையை இலக்கியவாதியும் ஓய்வுபெற்ற கோட்டக்கல்வி அதிகாரியுமான ஏ. பீர் முஹம்மட் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது எம்.எஸ். காரியப்பர் வித்தியாலய ஸ்தாபக அதிபர் ஏ.எல்.ஏ. நாபீத், ஓய்வுபெற்ற மூத்த ஆசிரியர் ஏ.எம். இப்ராலெப்பை, சாய்ந்தமருது கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ. எச். சபீகா, சாய்ந்தமருது பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ. பி. நௌஷாத், சாய்ந்தமருது கலாசார மத்திய நிலைய அபிவிருத்திச் சபைச் செயலாளர் அஸ்வான் எஸ. மௌலானா, பிரதிச் செயலாளர் யூ. எல். என். ஹுதா உமர், சாய்ந்தமருது எம்.எஸ். காரியப்பர் வித்தியாலய பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# பண மோசடியில் ஈடுபட்ட மூவர் பிணையில் விடுதலை

கனகராசா சரவணன்

பணமோசடியில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் மூன்றுபேர் சந்தேகத்தின் பேரில் கடந்தவாரம் கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின்பேரில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பில் தனியார் வங்கி ஒன்றில் 18 இலட்சம் ரூபாவை மோசடி செய்த வங்கி உத்தியோகத்தர் ஒருவரும் வேலைவாய்ப்புக்காக வெளிநாடு அனுப்புவதாக 16 இலட்சம் ரூபாவை மோசடி செய்த அரசியல் கட்சி ஒன்றின் உறுப்பினரும் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஆகியோரே சந்தேகத்தின்பேரில் கடந்தவாரம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

2018ஆம் ஆண்டு தனியார் வங்கி ஒன்றில் கடமையற்றிய வெளிக்கள உத்தியோகத்தர் ஒருவர், வங்கியில் கடன் பெற்றவர்களது வீடுகளுக்குச் சென்று அவர்களிடமிருந்து மாதாந்த கடன் தொகையை வசூலித்து வந்துள்ளார். இவ்வாறு அவரால் வசூலிக்கப்பட்ட 18 இலட்சம் ரூபாவை வங்கிக்கு செலுத்தாது அவர் மோசடி செய்துள்ளார். இந்நிலையில், வங்கி நிர்வாகம் அவருக்கு எதிராக மட்டக்களப்பு மாவட்ட குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவில் முறைப்பாடு செய்தது. இதனையடுத்து குறித்த நபர் தொடர்ந்து தலைமறைவாகி வந்த நிலையில் கடந்த 4ஆம் திகதி கைதுசெய்யப்பட்டார்.

இதேவேளை, திக்கோடை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரிடம் பிரான்ஸ் நாட்டுக்கு அனுப்பவுதாகத் தெரிவித்து அவரிடம் 16 இலட்சம் ரூபாவைப் பெற்று மோசடி செய்த அரசியல் கட்சி ஒன்றின் உறுப்பினரும் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவருமான இளைஞன் ஒருவரும் அவரின் நண்பன் ஒருவரும் கடந்த 5ஆம் திகதி கைதுசெய்யப்பட்டனர்.

இந்த இருவேறு சம்பவங்களில் கைது செய்தவர்களை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரிகள் சட்டத்தின்முன் நிறுத்தப்பட வேண்டும்

## மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை தெரிவிப்பு

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தில் 300க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். ஆதலால் இச்சம்பவத்தை வெறுமனே பார்த்துக்கொண்டிருக்கக் கூடாது. சூத்திரதாரிகள் சட்டத்தின்முன் நிறுத்தப்பட வேண்டும் என மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை தெரிவித்தார்.

அவர் இது பற்றி மேலும் தெரிவிக்கையில், பதவி மோகத்தால் இந்தத் தாக்குதல் திட்டமிடப்பட்டிருப்பதாக பல செய்திகள் தெரிவிக்கின்றன. இதனை நம்பவோ மறுக்கவோ முடியாதிருக்கிறது . ஆதலால் பக்கச் சார்பின்றிய சர்வதேச விசாரணை தேவை என்பதை நான் வலியுறுத்துகிறேன். அதனூடாகத்தான் சூத்திரதாரிகளைக் கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்த முடியும். இதனை அரசு செய்ய வேண்டும். இதை ஓர் இலகுவான காரியம் என எண்ணிவிடக் கூடாது. இந்தத் தாக்குதலில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட இடம் மட்டக்களப்பாகும்.



கிறிஸ்தவர்கள் எப்போதும் சௌபாக்கியத்தோடும் இணக்கப்பாட்டோடும் வாழ நினைப்பவர்கள்.

அவர்களுக்கு இது ஒருபோதும் நடந்திருக்கக்கூடாது. ஆனால், நடந்து விட்டதே! ஆகையினால் சூத்திரதாரிகளைக் கண்டுபிடிக்க வேண்டும். இவ்வாறான ஒரு நிலை எமது நாட்டுக்கு இன்னொரு தடவை வந்துவிடக்கூடாது என்றார்.

கிழக்கு செய்திகள் eastthamilan@gmail.com

# மாவிலங்கத்துறை சித்தி விநாயகர் ஆலய அலங்கார உற்சவம்

பாண்டிருப்பு நிருபர்

மண்முனைப்பற்று, ஆரையம்பதி ,மாவிலங்கத்துறை அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த ஆவணி சதுர்த்தி அலங்காரத் திருவிழா 15 ஆம் திகதி பூர்வாங்க கிரியைகளுடன் ஆரம்பமாகவுள்ளது.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ தேவ சுகிர்தராஜ் குருக்கள் தலைமையில் சிவஸ்ரீ ஏ.கு.தேவராசா குருக்களின் ஆசியுடன் உற்சவ கால பிரதம குரு சிவஸ்ரீ நாராயண சிவராஜா குருக்களினால் விசேட பூசை வழிபாடுகள் நடத்தப்படும். இங்கு விசேட திருவிழாவாக எதிர்வரும் 17 ஆம் திகதி பாற்குடபவனி, பன்னீர் திருவிழா நடைபெறும். 18 ஆம் திகதி விநாயகப் பெருமான் ஊர்தி வலம் வருதல், மாம்பழத் திருவிழா, 19 ஆம் திகதி காலை தீர்த்தோற்சவம் நடைபெற்று திருப்பொன்னூஞ்சல், வைரவர் பூசை ஆகியவற்றுடன் உற்சவம் நிறைவுபெறவுள்ளது.

# பெரியசாளம்பைக்கேணி விவசாய அமைப்பின் நிர்வாகிகள் தெரிவு





கோணாவத்தை செய்தியாளர்

சம்மாந்துறை, பெரியசாளம்பைக்கேணி விவசாய அமைப்பின் புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

திட்ட முகாமையாளர் ஏ.எல்.ஏ.சாபிர் தலைமையில் சபூர் வித்தியாலயத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் எம்.எஸ்.எம்.நவாஸ் பிரதம அதிதியாகவும் பொறியியல் உதவியாளர் ஏ.பாஸில், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர்.எம்.பிறோஸ், தொழில்நுட்ப உதவியாளர் ஏ.எம்.அப்துல்லா, மல்வத்தை கமநல சேவைகள் மத்திய நிலையத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இப்பிராந்தியத்தின் பல்வேறு நீர்ப்பாசன அபிவிருத்தி நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் ஏனைய விடயங்கள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டு அதற்குரிய நடவடிக்கைகளையும் துரிதமாக மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது. இதன்போது விவசாய அமைப்பின் புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம்பெற்றது.

## போடியார் புலம்பல்!



**உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் குறித்து இரண்டுநாள் பாராளுமன்றத்தில விவாதிக்கப்போறாங்களாமே ...!**

**மெய்யா மெய்யா இத விவாதிக்கருள பலரின் முகத்திரைகள் கிழிக்கப்படும் அவ்வளவுதான் வேற ஒண்டும் நடக்காது..**

**அத உட்டுத்து ஒரு சர்வதேச விசாரணய நடத்தி கிண்டி கிழறினா மட்டும் இன்று யோக்கியன் வேஷம் போடுறவங்க அயோக்கியனாக உள்ளதை மக்கள் உணருவாங்க எலுவா..? தென்பகுதியில் குண்டை வெடிக்கவச்ச கசபோக்கிலியல் ஏன்**

**வடக்கு கிழக்கில் மட்டக்களப்பு சியோண் தேவாலயத்த மட்டும் நாசமறுவானுகள் தேர்ந்து எடுத்தானுகள் எண்டத பார்த்தால் ஆரோ மட்டக்களப்பானுக்கும் இது தொடர்பு இருக்கோ எண்ட சந்தேகம் எல்லாப்பேருக்கும் வருகுது எலுவா....?**

# நிலநடுக்கத்தால் நிலைகுலைந்த மொரோக்கோ



- 2,500ஐ அண்மிக்கும் உயிரிழப்புகள்
- 2,421 பேர் படுகாயம்
- கட்டார் - பிரித்தானியா - ஸ்பெயின் உதவிக்கரம்
- 4ஆவது நாளாகவும் தொடரும் மீட்புப் பணிகள்









மொரோக்கோவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 2ஆயிரத்து 500ஐ அண்மித்துள்ள நிலையில் 2ஆயிரத்து 421 பேர் படுகாயமடைந்துள்ளனர். காயமடைந்தோரில் பலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

இன்று 4ஆவது நாளாகவும் மீட்புப் பணிகள் தொடரும் நிலையில் ஸ்பெயின், பிரித்தானியா மற்றும் கட்டார் உள்ளிட்ட நாடுகள் மீட்புக் குழுக்கள் மீட்புப் பணியில் களமிறங்கியுள்ளன.

மொரோக்கோவின் அட்லஸ் மலை பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை (09) உள்ளூர் நேரப்படி 11.11 மணியளவில் பூமிக்கு அடியில் 8.36 கி.மீ.ஆழத்தில் 6.8 ரிச்டர் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்நிலநடுக்கம் ஏற்பட்டு சிலமணிநேரங்களில் 4.9 ரிச்டர் அளவிலான மற்றுமொரு மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டதுடன் தொடர்ந்தும் பல பின் அதிர்வுகளும் உணரப்பட்டுள்ளன.

இந்நிலநடுக்கத்தால் கட்டடங்கள் பல சீட்டுக்கட்டுகளைப் போல சரிந்தன. கட்டடங்கள் குலுங்கியதால் பீதியடைந்த மக்கள் அலறியடித்துக்கொண்டு வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சமடைந்தனர். இரவு நேரம் என்பதால் உறக்கத்தில் இருந்தவர்கள் சுதாகரித்துக்கொண்டு வீட்டை விட்டு வெளியேறுவதற்குள் கட்டட இடிபாடுகளில் சிக்கிக் கொண்டுள்ளனர்.

நிலநடுக்கத்தால் மவுலே பிரேஹிம் என்ற கிராமத்தில் கடும் பேரழிவு ஏற்பட்டு வீடுகள், கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாகியுள்ளதுடன் குறித்த கிராமத்தை சேர்ந்த பலர் உயிரிழந்து விட்டனர். இதனால் கிராம மக்கள் சோகத்திலுள்ளனர். இடிபாடுகளிலிருந்து மீட்கப்பட்ட மக்கள் சேறும் சகதியுமாகவுள்ள கால்பந்து மைதானமொன்றில் தற்காலிக கூடாரங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். புராதன நகரமான மரகேச்சிலும் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணிகள் முழுவீச்சில் இடம்பெற்றுவருகின்றன. மீட்புப் படையினருடன் இராணுவத்தினரும் மீட்பு பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

மரகேச் அருகிலுள்ள மலைப் பகுதியில் பல கிராமங்களில் கடும் சேதம் ஏற்பட்டுள்ளது. ஆனால், வீதிகளில் பாறைகள் விழுந்துள்ளதால் மீட்புப் பணிகள் மேற்கொள்ள பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு செல்வதில் கடும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

**ஸ்பெயின் உதவிக்கரம்**

மொரோக்கோவின் அருகிலுள்ள ஐரோப்பிய நாடான ஸ்பெயின் மீட்புப் பணிகளில் உதவியளிப்பதற்கு தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளது. ஸ்பெயின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோஸ் மனுவேல் அல்பாரேஸ் தெரிவிக்கையில்,

''நிலநடுக்கத்தால் பாதிப்புக்குள்ளான மொரோக்கோ வெளியுறவு அமைச்சர் உதவி கேட்டுள்ளார். ஸ்பெயினுக்கும் மொரோக்கோவுக்கும் இருக்கும் நட்பின் அடிப்படையில், இந்த உதவி அளிக்கப்படுகிறது'' என்றார்.

இந்நிலையில் நிலநடுக்கம் ஏற்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகள் முழுவீச்சில் இடம்பெற்று வரும் நிலையில் நிலநடுக்கத்தால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 2ஆயிரத்து 122 ஆக அதிகரித்துள்ளது.

மரகேச் மற்றும் அதன் அருகில் இருக்கும் மாகாணங்களிலேயே அதிக உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. மேலும் இடிபாடுகளில் சிக்கி 2ஆயிரத்து 421 பேர் படுகாயமடைந்துள்ளனர். அதில், ஆயிரத்து 404 பேரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதாக அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன. நிலநடுக்கத்தில் ஏராளமானோர் பலியானதையடுத்து, அந்த நாட்டில் சனிக்கிழமை முதல் 3 நாட்கள் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.



**கட்டட இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தோர் ஒரே குழியில் புதைக்கப்பட்டனர்**



# வெற்றிகரமாக நிறைவடைந்தது ஜி-20 உச்சி மாநாடு

## மீண்டும் நவம்பரில் கலந்துரையாடல்; உலகத் தலைவர்களுக்கு மோடி அழைப்பு




டில்லியில் இடம்பெற்ற ஜி-20 உச்சிமாநாடு நேற்றுமுன்தினம் (10) வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது. இந்நிலையில் பிரான்ஸ், கனடா, தென்கொரியா, பிரேஸில், நைஜீரியா, நெதர்லாந்து, துருக்கி மற்றும் ஆபிரிக்க ஒன்றியத் தலைவர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தையை பிரதமர் மோடி நேற்றுமுன்தினம் ஒரே நாளில் மேற்கொண்டார்.

முன்னதாக அடுத்த ஆண்டு ஜி-20 உச்சிமாநாட்டுக்கு பிரேஸில் தலைமை வகிக்கவுள்ளதை முன்னிட்டு அந்நாட்டு ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லூலா டா சில்வாவிடம் பிரதமர் மோடி ஜி-20 இலச்சினையை ஒப்படைத்தார். நவம்பர் மாதத்தில் காணொளி வாயிலாக மீண்டும் ஜி -20 மாநாட்டைக் கூட்டி விவாதிக்கவும் உலகத் தலைவர்களுக்கு பிரதமர் மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

**சீனாவைத் தனிமைப்படுத்த விரும்பவில்லை**

இந்நிலையில், இந்தியாவில் இடம்பெற்ற ஜி-20 உச்சிமாநாட்டில் பங்கேற்ற பின்னர் நேற்றுமுன்தினம் விமானம் மூலமாக வியட்நாமின் ஹனோய் நகருக்கு சென்ற அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அங்கு கூடியிருந்த செய்தியாளர்களிடம் பேசியபோது,

''சீனாவை தனிமைப்படுத்த எண்ணவில்லை. அது பொருளாதார ரீதியாக வளர்ச்சி பெறட்டும். அதே நேரத்தில் சர்வதேச சட்டத்திட்டங்களை மதித்து நடந்து கொள்ளவேண்டும். மேலும், சீனா வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்களில் சட்ட திட்டங்களை மாற்றியமைக்க முயற்சித்து வருகிறது. சீனா வர்த்தக விதிகளை மாற்றிக்கொண்டு வருகிறது.

சீனாவில் அரசு அதிகாரிகள் எவரும் அமெரிக்க தயாரிப்பு செல்போனை இனி பயன்படுத்த முடியாது. இதைப்பற்றித்தான் பேச விரும்புகிறோம். சீனாவை தனிமைப்படுத்துவதற்காக தாம் குவாட் அமைப்பில் பங்கேற்கவில்லை என்றும் பிராந்திய அமைதிதான் தமது நோக்கம் எனவும் தெரிவித்துள்ளார்.

**புட்டினை நிச்சயம் கைது செய்யமாட்டோம்**

அடுத்த ஆண்டு பிரேஸிலில் நடைபெறவுள்ள ஜி-20 உச்சி மாநாட்டுக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் வரும் பட்சத்தில், அவர் பிரேஸிலில் வைத்து கைது செய்யப்பட வாய்ப்பே இல்லை என அந்நாட்டு ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ தெரிவித்துள்ளார்.

உக்ரைன் போரின்போது பிடிபடும் சிறுவர், சிறுமியரை சட்டவிரோதமாக ரஷ்யாவுக்கு நாடு கடத்தியதாக குற்றம்சாட்டி புட்டினை கைது செய்யுமாறு சர்வதேச நீதிமன்றம் கடந்த மார்ச் மாதம் உத்தரவு பிறப்பித்தது. டில்லியில் நடைபெற்ற ஜி-20 மாநாட்டில் பங்கேற்காத புட்டின், கடந்த மாதம் தென் ஆபிரிக்காவில் நடைபெற்ற பிரிக்ஸ் மாநாட்டையும் புறக்கணித்தார். இந்நிலையில் பிரேஸிலுக்கு வந்தால் புட்டின் கைது செய்யப்பட மாட்டார் என அந்நாட்டு ஜனாதிபதியும் தீவிர இடதுசாரியான இனாசியோ திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

# உலகளவில் 200 கோடி பேருக்கு இரத்த சோகை

உலகளவில் 200 கோடி மக்கள் இரத்த சோகை நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

உடல் முழுவதும் ஒட்சிசனை கொண்டு செல்ல போதியளவு இரத்த சிவப்பணுக்கள் இல்லாதபோது இரத்த சோகை ஏற்படுகிறது. இந்த ஒட்சிசன் விநியோகம் தடைபடுவதால் உடல் சோர்வு, லேசான தலைவலி, மூச்சுத் திணறல், கவன சிதறல், அன்றாடப் பணிகளில் பாதிப்பு ஆகியவை ஏற்படுகின்றன. இரத்த சோகை தற்போது உலகளாவிய சுகாதாரப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

கடந்த 1991 முதல் தற்போது வரை வயது மற்றும் பாலினத்தின் அடிப்படையில் 204 நாடுகளில் செய்யப்பட்ட ஆய்வுகளில் இரும்புச் சத்து குறைபாடே இரத்த சிவப்பணுக்களின் பற்றாக்குறைக்கு காரணம் என கண்டறியப்பட்டுள்ளதாக அமெரிக்காவின் வொஷிங்டன் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

5 வயதுக்கு குறைவான குழந்தைகள், இளம் பருவ பெண்கள் மற்றும் பெண்களிடையே இரத்த சோகை பாதிப்பு அதிகமாகவுள்ளது. இரத்த சோகை நோயை எளிய இரத்த பரிசோதனை மூலம் கண்டறியலாம். இரும்புச் சத்து அதிகமுள்ள பால், பழ வகைகள் உள்ளிட்ட உணவுகள், இரும்புச் சத்து மாத்திரைகள் சாப்பிடுவது ஆகியவற்றின் மூலம் இரத்த சிவப்பணுக்களை அதிகரித்து இரத்த சோகை நோயை தடுக்க முடியும். இரத்த சோகையை தடுப்பதற்கான சுகாதார நடைமுறைகளில் தற்போது அதிக கவனம் செலுத்தப்பட்டு, அதற்கான முதலீடுகளும் அதிகரித்துள்ளன.

# இலங்கையில் பார்வையற்றோருக்கு உதவிக்கரம் நீட்டுகின்றது சவூதி அரேபியா









இலங்கையின் பல்வேறு பாகங்களிலும் உள்ள கண்பார்வைக் கோளாறு நோய்களினால் அவதியுறக்கூடிய, குறைந்த வருமானம் கொண்ட மக்களுக்கு இலவசமாக மருத்துவம் செய்ய முன்வந்துள்ளது சவூதி அரேபியா.

பல்லாயிரக்கணக்கான நோயாளிகளைப் பரிசோதித்து, நோய்களைக் கண்டறிதல், அவற்றுக்குப் பொருத்தமான சிகிச்சைகளை வழங்குதல், தேவைப்படும்போது சத்திர சிகிச்சை செய்தல், கண் வெண்படலங்களை (cataract) நீக்குதல், கண்ணீர் குழாயில் ஏற்படும் அடைப்புகளை நீக்குதல், மூக்குக்கண்ணாடிகள் தேவைப்படும்போது அவற்றை வழங்குதல், தேவையான மருந்துகளை வழங்கல், சிகிச்சை பெற்றுக் கொண்டோருக்கு சுகாதார விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல் போன்ற பல அம்சங்கள் இச்சேவையில் உள்ளடங்குகின்றன.

செப்டெம்பர் 7 முதல் 16 வரை இலங்கை நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நிகழ்த்தப்படுகின்ற மேற்படித் தன்னார்வத் திட்டமானது, தற்போது தென்னிலங்கையின் “வலஸ்முல்ல” பிரதேசத்தில் நடத்தப்பட்டு வருகின்றது.

இலங்கையில் பார்வையின்மையை ஒழிக்கும் நோக்கில், “நிவாரணத்துக்கும் மனிதாபிமான உதவிக்குமான மன்னர் சல்மான் மையத்தின் ஏற்பாட்டில் சர்வதேச ‘அல்-பசர்’ அமைப்பின் ஒத்துழைப்புடன், “சவூதிய தன்னார்வ ஒளி” எனும் பெயரில் மேற்படித்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இரு புனிதத் தளங்களின் பணியாளரான மன்னர் ஸல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆலு ஸுஊத் மற்றும் முடிக்குரிய இளவரசரான முஹம்மத் ஸல்மான் பின் ஆலு ஸுஊத் ஆகியோரின் வழிகாட்டலின் கீழ், இலங்கையில் மாத்திரமல்லாது உலகம் பூராகவும் பல்வேறுபட்ட நிவாரண மற்றும் மனிதாபிமான உதவிகளை, 2015ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மன்னர் ஸல்மானின் மேற்படி மையம் தன்னார்வத்துடன் செய்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். கல்வி, சுகாதாரம், உணவு போன்ற பல்வேறு துறைகளில் செய்யப்படும் இவ்வுதவிகள் மூலம் இதுவரை 90க்கும் மேற்பட்ட நாடுகள் பயன்பெற்றுள்ளன. கிட்டத்தட்ட 06 பில்லியன் டொலர்களுக்கும் அதிகமாக செலவிடப்பட்டுள்ளன. யுத்தங்களினால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளான யமன், ஸிரியா, பலஸ்தீன் போன்ற நாடுகளும் சோமாலியா போன்ற வறுமையால் கஷ்டப்படும் நாடுகளும் மேற்படி உதவிகள் மூலம் அதிகம் பயனடைந்துள்ளன.



**அஷ்-ஷெய்க் லபர் இப்னு முஹம்மத் அஜ்வாத் (பஹ்ஜி, B.A. மதீனா)**

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7